Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 மாசி 17 செவ்வாய்க்கிழமை (01.03.2011) பக்கங்கள் 12 ஓசை - 152

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA

(C/490)

412, First Floor, Hospital Road, Jaffna. (Adjoining Sangeetha Mobile Links)

Fly Line Keethan - 0773 916 416 Tharshy - 0773 915 530

## கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி

(கொழும்பு)

அதிகரித்துவரும் விலைவா சிக்கு எதிராக இன்று கொழும் பில் ஆர்ப்பாட்டப் பேரணி நடாத்தவுள்ளது. இப் பேரணியில் அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறும் ஜே.வி.பி அழைப்பு விடுத்துள்ளது. இது தொடர்பாக் ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், பரப்புரைச் செயலாளருமான விஜித ஹேரத் ஊடகங்களிற்கு கருத்துத் தெரிவிக்கையில்,

உலக நாடுகளில் தற்போது இடம்பெற்று வரும் சர்வாதிகாரத்திற்கு எதிரான எழுச்சிப் போராட்டங்கள் போன்று, இலங்கையிலும் (12ஆம் பக்கம் பார்க்க)

## லிபியாவிலிருந்து வெளியேறிய இலங்கையர் 16 பேர் மாயம்

(கொழும்பு)

லிபியா நாட்டில் இருந்து உயிர் தப்பி கிறீஸ் நாட்டுக்கு சென்ற இலங்கையர்கள் 36 பேரில் 16 பேர் மர்மமான முறையில் காணாமல் போய் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

லிபியா நாட்டில் அதிபர் கேணல் கடாபிக்கு எதிராகவும், லிபியா அரசுக்கு எதிராகவும் போராட்டங்கங்கள் இடம்பெற்று வருகின்றன. இதன் காரணமாக இங்கு வன்முறைகள் தலை தூக்கத் தொடங்கியுள்ள நிலையில், லிபியாவில் உணவு விடுதி ஒன்றில் கடமையாற்றி வந்த இலங்கையர்கள் (12ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளப் பாதிப்புகளுக்கு ஜப்பான் அரசு நிதியுதவி

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலதிக அவசர உதவிகளுக்காக சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களினூடாக 132 மில்லியன் ரூபா வழங்க ஜப்பான் அரசு தீர்மானித்துள்ளது. இதற்கிணங்க நிவாரணம் மற்றும் முதற்கட்ட பணிகளுக்காக உலக உணவு திட்டத்திற்கு 77 மில்லியன் ரூபாவும், யுனிசெப் ஊடாக சுத்தமான நீர் மற்றும் சுகாதார வசதிகளுக்காக 33 மில்லியன் ரூபாவும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக இடம் பெயர்ந்த மக்களுக்கு (12ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கான நிதி உதவிகள் உரிய முறையில் பயன்படுகிறதா?

## கண்காணிப்புக்கு தயாராகும் நோர்வே

(ஒஸ்லோ)

**இலங்கை அரசும் இலங்கையில் செயற்படும் தொண்டு நிறுவனங்களும் வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளும் நிதி உதவிகளை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்கின்றனவா என்பது குறித்து மிக நுணுக்கமான கண்காணிபுக்களை மேற்கொள்வதற்கு நோர்வே அரசு தீர்மானித் துள்ளது. இலங்கையில் யுத்தகாலத்திலும் சரி, சமாதான காலத்திலும் சரி பல்வேறு சர்வதேச தொண்டு நிறுவனங்களின் ஊடாக சர்வதேச சமூகமும் நோர்வே அரசும் பல்வேறு நிதி** (12ஆம் பக்கம் பார்க்க)


## வடக்கு மாகாண அரச சேவை வெற்றிடங்களை நிரப்ப ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு மாகாண சபையின் பல்வேறு திணைக்களங்களிலும் உள்ள வெவ்வேறு பொதுச் சேவைகளிலும் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்முதற்கட்டமாக வடக்கு மாகாண பொதுச்சேவையில் வெற்றிடமாகவுள்ள இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் விவசாயப் போதனாசிரியர் பயிலுனர் தரம், இலங்கை தொழில் (12ஆம் பக்கம் பார்க்க)

## கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் உஷார் அடையும் யாழ்.சுங்கத் திணைக்களம்



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் புகழ்மிக்க கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு கச்சதீவில் கூடுகின்றவர்கள் மத்தியில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் சட்டவிரோத கள்ளக்கடத்தல்கள் இடம்பெறலாம் என்பதன் காரணமாக பக்தர்களை பரிசோதிக்க இலங்கை சுங்கத் திணைக்களத்தின் யாழ்.பணிமனை நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இதற்கென குருநகரிலும், நெடுந்தீவிலும், கச்சதீவிலும் சுங்கத்திணைக்கள அலுவலகங்கள் செயற்படவுள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஏ.ரி.வலவேக தெரிவித்துள்ளார். வரலாற்றுப் புகழ்மிக்க கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா இந்த மாதம் 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர் வரும் 20 ஆம் திகதி வரை மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்கு யாழ்.குடாநாட்டில் இருந்தும், தென்னிந்தியாவில் இருந்தும் பெருமளவு பக்தர்கள் வந்து செல்வது வழமை இதன்போது இரு நாடுகளுக்கு இடையேயான பொருட்களின் விற்பனையும் (12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாகாணத் திணைக்களங்கள் ஆளுநர் தலைமையில் விசேட மீளாய்வு

### அவற்றின் செயற்பாடுகள் குறித்து திருப்தி



(யாழ்ப்பாணம்)

திருகோணமலை வரோதய நகரில் இயங்கிவந்த வடக்கு மாகாண சபையின் தலைமை அலுவலகம், யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பட்டதையடுத்து மாகாண சபையின் முன்னேற்றச் செயற்பாடுகள் குறித்த முதலாவது கூட்டம் கடந்த 24ஆம் திகதி. வியாழக்கிழமை யாழ்ப்பாண பொது நூலகத்தில் இடம்பெற்றுள்ளது.

ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமான இந்தக் கூட்டத்தில் மாகாணசபையின் பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, ஆளுநரின் செயலாளர் ரங்கராஜன், உதவிச் செயலாளர் மற்றும் மாகாண சபையின் திணைக்களத் தலைவர்களும் கலந்து கொண்டனர். இந்தக் (12ஆம் பக்கம் பார்க்க)

# கொள்ளை இலாப வியாபாரிகளிடம் ஏமாறாது உழைப்புக்கேற்ற வருமானம் பெறுவது எப்படி?

## வன்னி விவசாயிகள் மத்தியில் அமைச்சர் டக்ளஸ் பேச்சு

(கிளிநொச்சி)

கமக்காரர்கள் கொள்ளை இலாப வியாபாரிகளிடம் ஏமாந்துவிடாமல் தமது உழைப்பிற்கேற்ற வருமானத்தை பெறவேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார். கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்தில் தற்சமயம் பெரும்போக அறுவடை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் நேற்றைய தினம் கிளிநொச்சியின் நெற்களஞ்சியமான முரசுமோட்டை பிரதேசத்திற்குச் சென்று கமக்காரர் அமைப்பு பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தற்சமயம் பெரும்போக அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் போதிய களஞ்சிய வசதி இன்மையாலும் அவசர பணத்தேவை காரணமாகவும் வேறு வழியின்றி மொத்த வியாபாரிகளிடம் அறா விலைக்கு தமது நெல்லை விற்பனை செய்வதாக கமக்கார அமைப்பினர் கவலையுடன் தெரிவித்தனர்.

இவ்விடயத்தில் (11ஆம் பக்கம் பார்க்க)



# கடல்உணவு பதனிடலில் புதிய தொழில்நுட்பம் யப்பானிய நிறுவனம் வடக்கில் அறிமுகம்

(வேலணை)

வடமாகாணத்தின் கரையோரக்கடல்களில் மீனவர்களால் பிடிக்கப்பட்டு வருகின்ற மீன்களிலிருந்து கருவாடுகளை நவீன தொழில் நுட்பமுறைகளில் தயாரித்துக் கொள்வதற்கான தொழில் நுட்ப முறைகளை பயிற்றுவதற்கான ஏற்பாடுகளை யப்பான் நாட்டைச் சேர்ந்த பாசிக் என்ற நிறுவனமொன்று முன்வந்துள்ளது.

மேற்படி பாசிக் என்ற இந்த நிறுவனம் நவீன தொழில் நுட்ப முறையில் பயிற்ச்சிகளை வழங்குவதற்காக வட மாகாணத்தைச்சேர்ந்த தும்பளை காரைநகர், உடுத்துறை, வேலணை கிழக்கு ஆகிய இடங்களை தெரிவு செய்து அங்குள்ள மீனவக்குடும்பங்களைச்சேர்ந்தவர்களிடம் மிருந்து தலா 10 பெண்களை பயிற்சிகளுக்காக தெரிவு செய்துள்ளனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ள பெண்களுக்கான பயிற்சிகளை கடந்த 21ஆம் திகதியில் இருந்து தொடர்ந்து வழங்கிவருகின்றனர். பயிற்சிகளின் போது பிடிக்கப்பட்டுள்ள மீனினை எவ்வாறு சுத்தம் செய்வது அவற்றினை எவ்வாறு பதப்படுத்துவதற்கு வெட்டப்படவேண்டும் அவ்வாறு வெட்டப்பட்ட மீன் துண்டங்களை பதப்படுத்தலுக்காகப். பாவிக்கப்படுதல்வேண்டும் என்பது பற்றிய பயிற்சிகளை வழங்கி வருவதுடன் பயிற்சியாளர்களுக்கு வேண்டிய உடை, மற்றும் உபகரணங்களையும் தொழில நுட்பஆலோசனைகளையும் பசுபிக் ஏசியா றிறோச்சென்றர் மற்றும், இன்டர்கோப் பிரேசன் நிறுவனத்தினைச்சேர்ந்தவர்கள் வழங்கி வருகின்றனர்.

இந்த தொழில் நுட்ப பயிற்ச்சி தொடக்கவிழாவில் பாசிக் நிறுவனத்தைச்சேர்ந்த மூறாசன், மீக்சீகோசன் யெயன் என்ற இருவருடன் யாழ். பல்கலை கழக கடல்வள பயிற்சி நெறியில் கற்றுக்கொள்கின்ற மாணவர்கள் கிராமசேவை அலுவலர் பெ.குலசிங்கம் மற்றும் இந்த நிறுவனத்தைச் சேர்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

பயிற்சியின் ஆரம்ப வைபத்தில் உரையாற்றிய யாப்பான் நாட்டைச்சேர்ந்த பாசிக் நிறுவனத்தின் அதிகாரியான மூறாசன் உரையாற்றுகையில் இப்பகுதியில் பிடிக்கப்பட்டுவருகின்ற மீன்களை கருவாட்டிற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்ற வழிமுறைகளையும், நுட்பங்களையும் நாம் அறிந்து கொள்வதற்கும் இதேநேரத்தில் எமது நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நவீனதொழில் நுட்பங்களையும் இங்கு அறிமுகம் செய்து வைப்பதற்காகவுமே நாம் இங்குவந்துள்ளோம் எனக் கூறினார்.


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தர வாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (R/017)

**விற்பனைக்கு**

கட்டுமண் 1கியூப் -11,000, அத்திவாரக்கருங்கல் 6X9, 1கியூப்- 9000, ஒரு அரிகல் 40 ரூபா, 3/4'' கருங்கல்லு சல்லி ஒரு கியூப் -13000. அதிகம் தேவைப்படுவோருக்கு விலைக் கழிவு உண்டு. யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களுக்கும் கொடுக்கப்படும்.

**தொடர்புகளுக்கு:**
0776253719 (R/059)




குளோபல் வைத்திய சாலையின் தகவல் நிலையத்தினால் 26ஆம் திகதி யூரோவில் மண்டபத்தில் நடத்தப்பட்ட கருத்தமர்வில் வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரம் போட்டி (FORTE) குழும தலைவர் எம்.எவ்.ஏ. றியாஸ் ஆகியோருடன் கலந்து கொண்ட பிரமுகர்களையும் காணலாம். (54)

## சிவராத்திரி விழா

உரும்பிராய் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நாளை புதன்கிழமை மாலை 6.00 மணிமுதல் ஆலய அறங்காவலர் எஸ். நிர்ணயநாதன் தலைமையில் சிவராத்திரி விழா இடம்பெறவுள்ளது. இவ்விழாவில் சிவராத்திரி மகிமை எனும் தலைப்பில் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தனின் சிறப்புச் சொற்பொழிவு, ஆலய அறநொறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், இன்னிசை ராகங்கள், இசை நிகழ்வு ஆகியன இடம்பெறவுள்ளன. (60)

## உலக உணவுத்திட்டத்தின் கீழ் மார்ச் மரத உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 11.08.2006ஆம் ஆண்டிற்குப் பின்னர் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் நலன்புரி நிலையங்களில் இருந்தும் யாழ். மாவட்டத்தில் மீள் குடியமர்த்தப்பட்டவர்களுக்கான மாசி மாதத்திற்கான உலக உணவுத்திட்டத்தின் உலர் உணவுப்பொருட்கள் கடந்த வாரம் முதல் சம்மந்தப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு யாழ். செயலக உலக உணவுத்திட்ட பணிமனையினரினால் விநியோகிக்கப்பட்டுவருகின்றன.

இவ்நிவாரண விநியோகத்துடன் சம்பந்தப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பொருட்களைப் பெற்று விநியோக நடவடிக்கைகளை ஆரம்பித்து இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்பதாக முடிக்குமாறும் அதற்கான உலர் உணவு நிவாரண விநியோக அறிக்கையை எதிர்வரும் 18ஆம் திகதிக்குமுன்பதாகவும் தமக்கு சமர்ப்பிக்குமாறும் யாழ். செயலக உலக உணவுத்திட்ட பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மேற்படி மீளக்குடியமர்ந்து ஆறுமாதங்களுக்கு உலக உணவுத்திட்ட உலர் உணவுப் பொருட்களை பெற்றுக் கொண்டவர்களுக்கு இவ் உலர்உணவுப் பொருட்கள் வழங்கப்படமாட்டாது எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## வெளிநாட்டு தபால் பொதிகள் யாழ்ப்பாணத்திலேயே பெறலாம்

### சுங்கத்திணைக்களம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளில் இருந்து வருகின்ற முப்பது கிலோ கிராம் நிறைகொண்ட தபால் பொதிகளை (பார்சல்) யாழ். தபாலகத்தில் இயங்கும் சுங்கத்திணைக்களத்தில் உரியவர்கள் பெற்றுக் கொள்ள முடியும் இதற்கென கொழும்பு செல்லவேண்டியதேவை இல்லை என யாழ். சுங்கத் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் ஏ.ரி. வலவேக தெரி வித்தார்.

இதுவரை காலமும் இவ்வாறான தபால் பொதிகள் கொழும்பில் சுங்கத்திணைக்களத்தினால் பரிசோதிக்கப் பட்டு கொழும்பில் வைத்தே உரியவர்களிடம் வழங்கப்பட்டு வந்தது. இனிமேல் யாழ். மக்களுக்கு அவ்வாறான சிரமங்கள் இருக்கமாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இவ்வாறான தபால் பொதிகளில் வருகின்ற கையடக்கத் தொலைபேசிகளைப்பெற்றுக்கொள்ள தொலைத் தொடர்புத்திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுவரும் பட்சத்திலேயே மட்டும் அவை உரியவர் களிடத்தில் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் யாழ். சுங்கத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஏ.ரி.வலவேக மேலும் தெரிவித்தார். (பா)

## பிறப்புச் சான்றிதழ் பெறுவதில் சிரமம்

(கொக்குவில்)

பிறப்புச் சான்றிதழை யாழ். செயலகத்தில் விண்ணப் பித்தும் பெறமுடியவில்லை இவ்விதம் பிறப்புச் சான்றிதழைப்பெறுவதற்காகப் பல தடவை விண்ணப்பித்து அலையும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே அரச அதிகாரிகள் சகல தேவைகளுக்கும் பிறப்புச் சான்றிதழைக் கோருவதாகவும் அதனைப் பெற முடியாமல் இருப்பதால் சகல காரியங்களும் செய்து முடிக்க முடியாமல் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

1995இல் இடம்பெயர்வு யாழ். செயலப்பகுதி அக்காலத்தில் நிர்மூலமான சம்பவங்களால் யாழ். செயலக பதிவுத்திணைக்களப்பிரிவில் பாதுகாக்கப்பட்டிருந்த ஆட்பதிவுகளில் அநேகமானவை சேதமடைந்து போயுள்ளன.

அத்தகைய பதிவுகளைப் பெறுவதானால் கொழும்புக் குச் சென்றே பெறவேண்டுமென தெரிவிக்கப்படுகிறது. இந்நிலைமை தோன்றி பத்து வருடங்களுக்கு மேலாகியும் இதுவரை யாழ். பதிவாளர் பிரிவால் கொழும்பில் இருந்து அவற்றை வரவழைக்க முடியாமல் உள்ளதா என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (68)


**STUDYING UK**

**March - April 2011 Intake**

மார்ச் ஏப்ரல் மாதத்தில் தொடங்கும் கல்லூரிக்கு மாணவர்கள் செல்வதற்கான அனுமதி பதிவுகளுக்கு முந்திகொள்ளுங்கள்

ENGLAND

**STUDENT VISA**

லண்டன் விசாக்கள் 100% விசா உத்தரவாதம்

மிகக்குறைந்த செலவில் குறுகிய நாட்களில் UK செல்ல!

குறைந்தபட்ச தகமை G.C.E (O/L) போதுமானது.

IELTS தேவையில்லை, விசேட ஆங்கில வகுப்புக்களுமுண்டு.

Sponsor (Bank Arrangement) வசதி செய்து தரப்படும்.

ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் இலவசம்.

பகுதி நேர வேலைவாய்ப்பு ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

கடைசியாக சென்றவர்களில் சிலர்:


S. Keerthiya
Urumpirai West,
Urumpirai.


Mr. Lavakumaran.
Wellvattithurai
Jaffna


V. Vijitharan
Pointpedro
Jaffna


A.Senthuran
Batticolla


Dinojkumar
Trincomalee


Vinson Amalathas
Pointpedro
Jaffna


T. Kiruthikka
Kantharmadam
Jaffna


A.J.Jackshan
Kilinochi


Jonis Amalraj
Pointpedro
Jaffna


Mr. Aron Thusanth
Pointpedro
Jaffna


R. Sanjeevan
Achuveli
Jaffna


Asker Ali
Main Street
Sammanthurai


V.Pushpakumar
Delf - Jaffna


Mr. A. Ravi
Nallur
Jaffna


Miss. Bavatharani
Chavakacheri
Jaffna


T.Asok Kumar
Adyapatham
Jaffna


R.Dinesh
KKS Road
Jaffna


Mr. Vikneswaran
Wattala
Colombo


Mr. Skywin
Batticolla


J.I. Niroshini
Kokilay
Jaffna

Westminster International Institute of Higher Education

**WESTMINSTER INSTITUTE OF HIGHER STUDIE**

No. 03, Ramanathan Road, Kalatti Junction, Jaffna.

**0213207778 - 0772229286 - 0771919192.** (R/020)

வாழ்க்கைக்கு வழிகாட்டியாக உயர்த்த ஓர் உயர்ந்த இலட்சியம் இருக்க வேண்டும். அது இல்லாவிட்டால் அவன் கேவலமான மிருகத்திற்குச் சமமாகப் போய்விடுவான். - விவேகானந்தர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## சுண்டங்காயா? சுரைக்காயா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று கூறிக் கொள்ளும் தேசியவாதிகளின் கூட்டுக்குள் இது வரைகாலமும் அமுக்கி வைக்கப்பட்டிருந்த உட்கட்சிப் பூசல் பூதாகாரமாக உருவெடுத்திருப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்த உட்கட்சிப் பூசல் இன்று நேற்று உருவானதொன்றல்ல. யுத்தத்தில் புலிகள் தோற்கடிக்கப்பட்ட நாள் முதல் கருக்கூட்டிவந்த உட்பூசல் இன்று சந்தி சிரிக்கும் அளவுக்கு வந்துவிட்டது.

'தமிழ்' என்ற மூன்றெழுத்தைப் பயன்படுத்தி அரசியலில் சுயலாபம் தேடுவதற்காக கட்சி உருவாக்கியவர்களுக்கு அந்தக் கட்சியைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஞானக்கண் இப்போது திறந்திருப்பது ஆச்சரியமல்ல.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தனியான ஒரு அரசியல் கட்சியாக பதிவுசெய்வது தொடர்பாகவே தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்கள் காலங்கடந்த நிலையில் இப்போது கொதிப்படைந்துள்ளனர்.

அரசியல் பிழைப்பை தொடர்ந்து நடத்துவதற்காக ஒற்றுமைக் கோஷங்களை மக்கள் முன் வைத்து அந்த ஒற்றுமையை சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்ட எமக்கு வாக்களியுங்கள் என்று தேர்தல் காலங்களில் கோரிவந்தனர்.

இந்த ஒற்றுமைக் கோஷம் இதயசுத்தியுடன் அவர்களிடமிருந்து எழுந்ததா என்று மக்கள் சந்தேகிக்கும் அளவுக்கு அவர்கள் குழப்பத்தில் மூழ்கியிருப்பதைக் காணமுடிகின்றது.

மக்கள் மத்தியிலும், அரச மட்டத்திலும் செல்வாக்குப் பெற்று வருபவர்கள் மீதான காழ்ப்புணர்வே இந்த ஒற்றுமைக் கோஷத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்ற ஐயுறவு மக்கள் மத்தியில் இப்போது முளைவிட ஆரம்பித்துள்ளதைக் காண முடிகிறது.

ஒற்றுமைக் கோஷத்தை முன்வைத்து தமிழ் மக்களின் வாக்குகளைச் சூறையாடி வந்தவர்களுக்கு பார்வதியம்மாளின் இறப்பும் அரசியல் முலாம் பூசப்பட்ட இறுதிச்சடங்கு நிகழ்ச்சிகளும் ஆப்பு வைத்ததைப் போல் அமைந்துவிட்டது.

இதனால்தான் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்கள் கொதித்தெழுந்து எங்களிடம் 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உண்டென்று மார்தட்டி பத்திரிகையாளர்களைக் கூட்டி தெரிவித்துள்ளனர்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தல்களின் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் ஏமாற்று வித்தைக் காரருடன் சேர்ந்து உள்ளூராட்சி சபைகளின் பதவிகளைக் கைப்பற்றலாம் என்ற நப்பாசையுடன் இணைந்தவர்களுக்கு கிடைத்தது பெருத்த ஏமாற்றமே.

நீண்டகாலமாக முளைவிட்டிருந்த மோதல்கள் தேர்தல் ஒத்திவைப்புக்குப் பின்னர் பூதாகாரமாக வெடித்திருப் பதும் தமிழ் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் ஒத்திவைக்கப்படாதிருந்தால் இந்தக் குழப்பம் ஏற்படாதிருந்திருக்கும். ஆனால் தேர்தலுக்குப் பின்னர் அது எப்படியும் ஏற்பட வாய்ப்பு இருந்திருக்கும்.

இவையெல்லாவற்றையும் தமிழ் மக்கள் மிகவும் உன்னிப்பாகவே அவதானித்து வருவதை அவர்கள் அறியாமலும் இல்லை.

*விட்டுக்கொடுக்க முடியாத தமிழரசுக் கட்சியின்* உரிமையாளர்கள் என்றும் தம்மிடமே அதிக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதாகவும், அதனால் தாமே தலைமை ஏற்போம் என்றும் கூறியிருப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனையவர்கள் எப்படி பதிலளிக்கப் போகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள தமிழ் மக்கள் காத்திருக்கின்றனர்.

அவர்கள் மட்டும் சுண்டங்காயா? சுரைக்காயா?

-ஆசிரியர்-

# பேச்சுவார்த்தை மூலமே பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும்!

## கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளிடம் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அமைதியாக, ஒற்றுமையாகப் பிரச்சினைகளை அணுகிப் பிரச்சினைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்பட வேண்டும். உங்கள் பிரச்சினைகள் தொடாபாக ஒருமாத காலத்துக்கு ஜனாதிபதியுடன் பேசி உரிய தீர்மானத்தினைப் பெற்றுத் தருவேன். அதுவரை பொறுமையாக இருங்கள் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்க சமாசம்,சம்மேளனப் பிரதிநிதிகளைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

எமது பிரதேசத்தில் இழுவைப்படகுத் தொழிலில் ஈடுபடக் கூடாதெனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர் மீண்டும் எமது பகுதியில் அத்துமீறித் தொழிலில் ஈடுபடுகின்றார்கள். இதனால் எமது பிரதேசத்தை சுற்றியுள்ள கடலவளம் முற்றாக அழிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கடல் வளம் அழிக்கப்படுவதன் மூலம் எமது அடுத்த சந்ததி மட்டுமல்ல இப்போதைய சந்ததியே மீன்பிடி வருமானம் இன்றிப் பட்டினிச்சாவை எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

மீன் உற்பத்தியை அறவே அழிக்கும் இழுவைப் படகுத் தொழில், தங்கூசிவலை, டிஸ்கோ வலை போன்றவை அரசினால் தடை செய்யப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட தொழில்களை நாம் செய்வதை முற்றாகத் தவிர்க்க வேண்டும். மீறிச் செயற்பட்டால் சங்கங்கள் மூலம் எனக்கு அதனை அறிவியுங்கள்.

இந்திய மீனவர்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் சங்கங்கள் ஊடாக எனது கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். எனக்குத் தெரியாமல் எதையும் செய்ய வேண்டாம். உங்கள் பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தைகளின் போது எடுத்துக் கூறி நல்ல தீர்வினைப் பெற்றுத் தர முயற்சி எடுப்பேன் எனக் கூறினார்.

கலந்துரையாடலில் கலந்து கொண்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்க, சமாசப்பிரதிநிதிகள் அண்மை நாடகளில் கரையில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்துக குள் வந்து இழுவைப் படகுத் தொழிலில் இந்திய மீனவர்கள் ஈடுபடுவதால் தமது மீன்பிடி வலைகள் வெட்டுப்படுவதாகவும், பயம் காரணமாகத் தாம் மீன்பிடிக்கச் செல்ல முடியாத நிலையில் இருப்பதாகவும், சமாதானம் ஏற்பட்டுள்ள நிலையில் பாஸ் நடைமுறை முற்றாக நீங்கப்படவேண்டுமெனவும் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இக்கலந்துரையாடலில் கடற்படை, இராணுவ பொலிஸ் உயர்அதிகாரிகள், கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க, சமாச, சம்மேளனப்பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (70)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தரம் 2 வகையைச் சேர்ந்த யா/பாசையூர் சென் அன்ரனிஸ் மகளிர் பாடசாலை அதிபர் பதவிக்கு யாழ்.கல்வி வலய மாகாணப் பாடசாலைகளில் கடமைபுரியும் அதிபர் சேவை மற்றும் ஆசிரியர் சேவை வகுப்பு 1,2I ச் சேர்ந்த பெண் அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தேர்வு செய்யப்படுபவர் ஆகக் குறைந்தது மூன்று வருடங்களாவது சேவையாற்றவேண்டும். அதிபர் சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காவிடின் மட்டுமே ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

விண்ணப்பப்படிவங்களை ஆசிரிய நிர்வாகக் கிளையில் பெற்று 11 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார்.

## தாய், சேய் நிலயங்களுக்கு சோளம், சோயாமா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள தாய் சேய் நிலையங்களுக்கான மார்ச் மாதத்திற்கான சோளம், சோயாமா யாழ்செயலக உலக உணவுத்திட்ட பணிமனையினால் விநியோகிக்கப்பட்டுள்ளது.

உலக உணவுத்திட்டத்தினால் தாய்,சேய் முதலானவர்களுக்கு அவர்களின் போசாக்கு நிலையை விருத்தி செய்யுமுகமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இச்சோளன் சோயாமா பைக்கற்றுக்கள் யாழ்.செயலக உலக உணவுத்திட்டப் பணிமனையினால் யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார திணைக்களத்திற்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவை அங்கிருந்து சகல பிரதேசங்களுககும் தாய், சேய் நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது (பா,54)



யாழ்.அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு "சதாசிவன்" என்ற மலர் வெளியீட்டு விழாவில் முதற்பிரதியை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிடம் எஸ்.தர்மகுலசிங்கம் என்பவர் பெறுவதைப் படத்தில் காணலாம். (25)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கே.விஜயதேவன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாயகோட்டக்கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியமும, சிறப்புவிருந்தினராக அச்சுவேலி தெற்கு கிராம சேவையாளர் பி.சாந்தரூபனும், கௌரவ விருந்தினராக இப் பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி.ப.சிவ ஞானமும் கலந்து கொள்ளவுள்ளனர். (மி,03)

## பாடத்தெரிவில் வற்புறுத்தல்கள் கலைப்பீட மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(தும்பளை)

யாழ்.பல்கலைக்கழக புதுமுக கலைப்பீட மாணவர்கள் பல்கலைக்கழக பாடத்தெரிவு தொடர்பான வற்புறுத்தல்களைக் கண்டித்து கடந்த வெள்ளிக்கிழமை முதல் கால வரையறையற்ற பகிஷ்கரிப்பு போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தலைவர் எஸ்.கிருபாகரன் அறிவித்துள்ளார்.

2009-2010 கல்வியாண்டில் இணைந்து கொண்ட பல்கலைக்கழக மாணவர்களைப் பல்கலைக்கழக நிர்வாகத்தினர் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கற்றபாடம் ஒன்றையேனும் பல்கலைக்கழகத்திலும் தொடர்ந்து கற்க வேண்டும் என வலியுறுத்தி வருவதால் இப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

எனினும் இவ்விடயம் குறித்து பல நடமுறைச் சிக்கல்கள் உள்ளதாகவும் சில பாடசாலைகளில் மாணவர்களின் விருப்பத்திற்குரிய பாடங்களை கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படுவதால் அவை கற்பிக்கப்படுவதில்லை எனவும், புள்ளிவிபரவியல், வரலாறு போன்ற பாடங்கள் குறிப்பிட்ட சில பாடசாலைகளில் மட்டுமே கற்பிக்கப்படுகிறது.

இதைவிட பாடசாலைகளில் கற்பிக்கப்படாத பாடங்கள் பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்படுகின்றன. *சமூகவியல் திட்டமிடல் போன்ற பாடங்களைக்* குறிப்பிடலாம். இவ்வாறான நிபந்தனைகள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில் கையேட்டில எதுவும் குறிப்பிடப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை பாடசாலை மாணவர்கள் பல்கலைகழக அனுமதிக்காக விண்ணப்பிக்கும் போது பாடசாலை அதிபர்களோ, ஆசிரியர்களோ பாடத்தெரிவு தொடர்பான சரியான விளக்கத்தை மாணவர்களுக்கு வழங்கத் தவறியமையாலேயே இவ்வாறான சிக்கல்கள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது (62)

# 55 வருட பூர்த்தியை முன்னிட்டு காரைநகர் கடற்படையினரால் 4 பேருக்கு வீடுகள் கையளிப்பு

(காரைநகர்)

காரைநகர் தோப்புக்காட்டுப் பகுதி மக்கள் கடற்படையினருடன் சகோதரர்கள் போல் பழகுவதுடன் எந்தத் தேவைகளையும் எளிதில் செயல்வடிவில் காட்டக்கூடியவர்கள் என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது என வடபிராந்திய கட்டளைத் தளபதி அட்மிரல் எஸ்.எம.பி.வீரசேகர தெரிவித்தார்.

காரைநகர் கடற்படை முகாம் அமைக்கப்பட்டு 55 ஆவது வருட பூர்த்தியைக் கொண்டாடும் முகமாக கடற்படையினரும், பொது மக்களும், பொது நிறுவனங்களும் இணைந்து வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்காக அமைக்கப்பட்ட 10 வீடுகளில் மிகுதி நான்கு வீடுகளைப் பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது-

இத்திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு பண உதவி, பொருள் உதவி வழங்கிய சயுரி சர்வதேச நிறுவனம் மற்றும் உத்தியோகத்தர்கள், வியாபாரிகள், வர்த்தக நிறுவனங்கள், பொதுமக்கள் எனப் பலரும் உதவி வழங்கியதுடன் எமது படையினரின் அயராத உழைப்பின் பயனாக இவ் வீடுகள அமைக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறான செயற்றிட்டங்கள் பலவற்றை படையினா மேறகொள்ளவிருக்கின்றனர். வீடுகளை அமைத்துக் கொடுப்பது மட்டுமல்லாமல் அவர்களுடைய வாழ்க்கையையும் மேலோங்கச் செய்ய வேண்டும். இதுவே எமது ஜனாதிபதியின் சிந்தனையுமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் காரைநகர் கட்டளைத் தளபதி ஏ.யூ.சி.சில்வா, ஊர்காவற்றுறை நீதிபதி ஜோய் மகிழ் மகாதேவா, காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆ.ரி.ஜெயசீலன் மற்றும் கடற்படை அதிகாரிகள், வங்கி முகாமையாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி காரைநகர் அமைபபாளர், சங்கத் தலைவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (50)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்.நிருபர்)

கீரிமலை நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரன் புகழ் பாடும் "சிவனவன் கழற்கோர் செந்தமிழ் மாலை" நூல் எதிர் வரும் 2 ஆம் திகதி புதன் கிழமை சிவராத்திரி தினத்தன்று வெளியிடப்படவுள்ளது.

கீரிமலை சிவன் தேவஸ்தான மண்டபத்தில் "அடியார்க்கு அமுதூட்டும் அண்ணல்" க.கு.க. சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நூல் வெளியீட்டு விழாவில் நகுலேஸ்வர ஆதீன பிரதம குரு ராஜராஜ ஸ்ரீ.கு.நகுலேஸ்வரக் குருக்கள் ஆசியுரை வழங்கவுள்ளார்.

நூல் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும், நயப்புரையை செஞ்சொற்செல்வர் இரா.செல்வ வடிவேலும் நிகழ்த்தவுள்ளனர்.

சிவத்திரு சு.செல்வரத்தினம் அவர்களின் அனுசரணையில் நடைபெறும் இந்நூல் வெளியீட்டின் மூலம் கிடைக்கும் நிதி முழுவதும் நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப் பெருமான் ஆலயத் திருப்பணிக்கு வழங்கப்படும் என்பது குறிப்பிடத் தக்கது. (10)

# சின்னஞ் சிறு செய்திகள்

## மெய்வன்மைப் போட்டி

(தாளையடி)

தாளையடி றோ.க.த.கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 1.30 மணிக்கு வடமராட்சி கிழக்கு பொது விளையாட்டு மைதானத்தில் அதிபர் நா.கண்ணதாசன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் பிரதம விருந்தினராகவும், 55ஆவது படையணி சிவில் மற்றும் பொது மக்கள் தொடர்பு அலுவலகப் பொறுப்பதிகாரி லெப்.கேணல் ஜானக டீ.சில்வா, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், வடமராட்சி கிழக்கு கோட்டக்கல்வி அதிகாரி க.பொன்னையா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், கௌரவ விருந்தினராக தாளையடி பங்குத்தந்தை அருட்தந்தை ஜேம்ஸ பத்திநாதன் அடிகளாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (70)

## சிவராத்திரி விழா

(தும்பளை)

பருத்தித்துறை சத்திய சாயி சேவா நிலையத்தில் மகா சிவராத்திரி நிகழ்வுகள் நாளை நடைபெறவுள்ளன.

மாலை 6.45 மணிக்கு சாயி காயத்திரி ஓதுதலுடன் ஆரம்பமாகவுள்ள இந்நிகழ்வில் தொடர்ந்து பிரசாந்தி, கொடியேற்றம், மூன்று சாமப்பூசைகளும், பஜனை மற்றும் காலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (62)

## வெங்காயத்தின் விலை வீழ்ச்சி

(நல்லூர்)

யாழ்ப்பாணத்தில் சின்ன வெங்காயத்தின் விலை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளது.

கிலோ 250 ரூபா வரை விற்கப்பட்ட இந்த வெங்காம் தற்போது 75 ரூபாவாக சரிந்து காணப்படுகின்றது.

தற்போது வெங்காய அறுவடை இடம்பெற்று வருவதால் அவை தாராளமாகச் சந்தைக்கு எடுத்துவரப்படுகின்றன.

இதனயடுத்தே அதன் விலைகள் சரிந்து காணப்படுகின்றது. அதேசமயம் சின்ன வெங்காயம் தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்வதிலும் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். (25)

## சிவவாரமாக அனுஷ்டிப்பு

(யாழ்.நிருபர்)

சிவத்தமிழ் மானிட விடியற் கழகத்தினா் மகா சிவராத்திரியை முன்னிட்டு இவ்வாரத்தை சிவவாரமாக அனுஷ்டித்து வருகின்றனர்.

இந்த வாரத்தில் சிரமதானம, இரத்ததானம், தியானம், யோகாசனம், அறநெறிப் பயிறசி பற்றிய கருத்தரங்குகள், யுத்தப் பாதிப்புக்குள்ளான வன்னி மாணவர்களின் கல்வி ஊக்குவிப்பு உதவிகள், மருத்துவமுகாம மற்றும் மரநடுகை இயக்கம போன்றவற்றை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி சிவவார நிகழ்வுகளில் கலந்துகொண்டு பயன் பெறுமாறு சிவத்தமிழ் மானிட விடியற் கழகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (10)

# வாழ்வாதார மேம்பாட்டுக்கு உதவுமாறு அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை விடுப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து சென்ற குடும்பங்களில் சுமார் 250 வரையான கடற்றொழிலாளர் குடும்பங்கள் மணற்காடு, குடத்தனை வடக்கு, பொற்பதி கிராமங்களிலும், வடமராட்சியில் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இப்பிரதேசத்தில் ஒரு பகுதியினருக்கு வாழ்வாதார உதவிகள் கிடைக்கப்பெற்ற போதும், மீளக்குடியமர்ந்த மணற்காடு, குடத்தனை வடக்கு, பொற்பதி, நாகர்கோயில் மேற்கு, நாகர்கோயில் கிழக்கு ஆகிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கடற்றொழில் உபகரணங்களை வழங்குவதற்குரிய ஒழுங்குகளை அரச, அரசசார் பற்ற நிறுவனங்கள், கடற்றொழில் நீரியல் திணைக்களம், வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர், வடமராட்சி கிழக்கு கடறறொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் எதுவுமே உரிய ஒழுங்குகளை மேற்கொள்ளவில்லை.

ஆகவே சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு வாழவாதார உதவிகளைப் பெற்றுத் தரும்படி பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிடம் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (70)

## முறைசாராக் கல்விக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்.நிருபர்)

யாழ்.வலயக் கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் கோப்பாய் கலைவாணி கல்வி நிறுவனத்தால் பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் நடத்தப்படவுள்ளன.

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த இளைஞர், யுவ திகள் திறன்களை விருத்தி செய்யும் நோக்கத்துடன் கணனிப் பயிற்சி, ஆங்கில மொழிப்பயிற்சி, சிங்கள மொழிப்பயிற்சி என்பன ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்புவோர் மேற்படி கல்வி நிறு வனத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (10)

# உலக அமைதி வேண்டி திருமுறை முற்றோதல்

(வவுனியா)

அகில இலங்கைச் சைவசமயப் பாதுகாப்புப் பேரவையின், வவுனியாக் கிளையினர் உலக அமைதி வேண்டித் திருமுறை முற றோதல் வழிபாட்டுப் பிரார்த்தனையினை வவுனியா கோயில் வீதியில் அமைந்துள்ள ஆறுமுகநாவலர் திருமுறை மண்ட பத்தில் கடந்த பல மாதங்களாகத் தொடர்ச்சியாக நடத்தி வருகின்றனர்.

இப்பிரார்த்தனை கடந்த வருடம் யூலை மாதம் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை பேரவைச் செயலாளர் கோ.தனபாலன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப்பிரார்த்தனை தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நாள் முழுவதும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது. இதில் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வந்துள்ள சைவப் பெரியார்கள், சங்கீத விற்பன்னர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் எனப் பலரும் கலந்து பிரார்த்தனையில் ஈடுபட்டு வருகின்றனர். (06)





யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றிருந்த வேளை, பாடசாலை அதிபர், ஆசிரியர்களினால் பிரதம விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், கனிஷ்ட பிரிவு மாணவிகளின் வரவேற்புக் கலை நிகழ்வு இடம்பெறுவதையும் படங்களில் காணலாம். (06)

# தகவல்துறையில் பட்டம் பெற்றவர்கள் ஆசிரியத் தொழிலுக்கு வரத் தயங்குகிறார்கள்

(யாழ்.நிருபர்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்தைக் கற்பிப்பதற்குப் போதியளவு ஆசிரியர்கள் இல்லாத நிலையில் மாணவர்களுக்கு உதவு முகமாக வெளியில் உள்ள வளங்களைப் பயன்படுத்தி இலவசமாக மாணவர்களுக்கு கணனி பயிற்சிக் கருத்தரங்குகளை நடத்தி வருகிறோம் என்று ஈசொவ்ற் கணனிக் கல்லூரி வடபிராந்தியப் பணிப்பாளர் ஜெயக்குமார் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளில் 1000 மாணவர்களுக்கான தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியல் பயிற்சிக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியில் முதல்வர் ந.யோகராஜன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பணிப்பாளர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

கணனித்துறையில் பட்டம் பெற்றவர்கள் வெளியில் கூடிய சம்பளம் கிடைப்பதனால் ஆசிரியத் தொழிலுக்கு வரத் தயங்குகி றார்கள். இதனால் அரசாங்கப் பாடசாலைகளில் கணனி தொடாபான கல்வியைப் போதிப்பதற்கும் குறிப்பாக 'தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியல்' பாடதைதப் படிப்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லை. இக்குறையை நிவர்த்தி செய்வதற்கு எமது கணனிக் கல்லூரி போன்ற நிறுவனங்கள் உதவி வருகின்றன.

யாழ். மாவட்டத்திலுள்ள பல வேறு சிறிய, பெரிய பாடசாலைகளிலிருந்தும் 1500 மாணவர்களுக்கு இப்பயிற்சியை இலவசமாக வழங்கி சான்றிதழ்களையும் வழங்குகிறோம். கணனிக் கல்வி பற்றிய விழிப்புணர்வையும் ஆங்கிலமொழி தொடர்பான பயத்தை மாணவர்களிடமிருந்து நீக்குவதும் எமது பிரதான நோக்கமாகும்.

வெட்டுப்புள்ளி அடிப்படையில் மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படுவதால், யாழ். மாவட்டத்தில் பல்கலைக்கழகங்களில் கணனிக் கற்கை நெறிகளுக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அருகி வருகிறது.

மொறட்டுவ, கொழும்பு போன்ற பல்கலைக்கழகங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்தவாறே குறைந்த செலவில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பட்டப்படிப்பை எமது நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ள முடியும்.

இந்தியா போன்று எமது நாட்டிலும் சிறு வயது முதல் கணனி பயில்வதற்கு வசதியாக யாழ். மாவட்டத்திலுள்ள முன்பள்ளிச் சிறார்களுக்கு கணனிப் பயிற்சிகளை வழங்கி வருகிறோம். இப்பயிற்சி நெறிகள் சிறுவயதிலிருந்தே அவர்கள் ஆங்கிலத்தில் தொடர் பாடலை மேற்கொண்டு உயர் கல்வி கற்க வாய்ப்பாக அமைகிறது.

எமது மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் பயின்று பட்டயத் தகவல் தொழில் நுட்பத் தகைமையைப் பெறுவதற்குரிய பரீட்சைக்குத் தோற்றுவதற்கு 2011 ஏப்ரல் தொடக்கம் லண்டன் பட்டயத் தகவல் தொழில் நுட்ப நிறுவனத்துடன் இணைந்து அதற்குரிய ஏற்பாடுகளையும் செய்துள்ளோம்.

தொழில்நுட்பக் கல்லூரிப் பணிப்பாளர் ந.யோகராஜன் இவ்விடயம் தொடர்பாக மேற்கொண்டுவரும் செயற்திட்டங்கள், இலவச பயிற்சிக் கருத்தரங்குகள் போன்ற பணிகள் பாராட்டுக்குரியவை என்று கூறினார்.

ஈசொவ்ற் கணனிக் கல்லூரி யாழ். மாவட்ட முகாமையாளர் ஜே.ஜனார்த்தனன் உட்பட மற்றும் பல விரிவுரையாளர்களும் கருத்துரை வழங்கினர். (10)

# சுருவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரிக்கை

(யாழ்.நிருபர்)

தீவக கல்வி வலயத்துக்குட்பட்ட ஊர்காவற்றுறை கோட்டத்தின்கீழ் உள்ள சுருவில் றோ.க பாடசாலையை மீண்டும் ஆரம்பிக்குமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுருவில் கிராமத்தில் உள்ள மேற்படி பாடசாலையின் கட்டடத்தில் மீண்டும் இயங்குவதன் மூலம் சுருவில், அம்பிகைநகர், வேலணை மேற்குப் பகுதியிலுள்ள மாணவர்கள் கற்பதற்கு வசதி ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இக்கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் அதிக தொலைவில் உள்ள வேலணை, ஊர்காவற்றுறை போன்ற இடங்களில் உள்ள பாடசாலைகளுக்குச் சென்று கற்கவேண்டியுள்ளது.

1990 இல் மூடப்பட்ட இப்பாடசாலையை மீண்டும் திறப்பதன் மூலம் தரம் 1-5 வரை உள்ள மாணவர்கள் பயனடைவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (10)

# அதிபர் கூட்டம்

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தைச் சேர்ந்த தேசிய மற்றும் தனியார் பாடசாலைகள் தவிர்நத எல்லா மாகாணப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இன்று செவ்வாய்க்கிழமை மதியம் 1.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சகல பாடசாலை அதிபர்களும் தங்களது பாடசாலைத் தளபாட விபரம், சமயலறை அமைத்தல், ஆசிரிய ஆளணி தொடர்பான விடயங்களுடன் சமுகமளிக்குமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# நியமனம்

(யாழ்ப்பாணம்)

நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் 142 சட்டத்தரணிகளை சத்தியப் பிரமாண ஆணையாளர்களாக நியமனம் செய்துள்ளார்.

இவ்வாறு நியமனம் செய்யப்பட்டவர்களுள் 8 பேர் தமிழர்களாவர். அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு -

சட்டத்தரணிகளான யோகேந்திரசர்மா சிவராசசர்மா, மாணிகம்பிள்ளை கணேஸ்வரன், அண்ணாத்துரை தர்ஷினி, பாலன் கிரிஷாந்தினி, நிரஞ்சினி இரத்தினசிங்கம், இராமநாதன் சசிகுமார், இசாயிப்பிரியா தருமராசா, கந்தையா வேலுப்பிளளை மகாதேவன் ஆகியோரே சத்தியப் பிரமாண ஆணையாளர்களாக நியமனம் பெற்றவர்களாவர்.

# விண்ணப்பம் கோரல்

சுகாதார அமைச்சில் துணை மருத்துவ சேவைப் பிரிவில் கண்தொழில்நுட்பவியலாளர், பல் தொழில்நுட்பவியலாளர் பதவிகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் ஆண், பெண் இருபாலாரிடமும் இருந்து கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் யாவும் 25.03.2011 இற்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இவை தொடர்பான மேலதிக விபரங்களை 25.02.2011 வெளி வந்த வர்த்தமானப் பத்திரிகையிலிருந்து அறிந்துகொள்ளலாம். வர்த்தமானப் பத்திரிகையை தினமுரசுக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

# அரச தனியார்துறை ஊழியர்களின் நலன் கருதி திறந்த பல்கலைக்கழகம் செயற்படுகிறது

(தொல்புரம்)

அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில் புரிவோர் தமது பதவிகளில் உயர்வைப் பெற்றுக் கொள்வதற்கு பட்டச்சான்றிதழ் இன்றி பல்வேறு சிரமங்களை எதிர் கொள்கின்றனர். இத்தகையவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே இலங்கை திறந்த பல்கலைக் கழகம் செயற்படுகின்றது என்று யாழ். பிராந்திய திறந்த பல்கலைக்கழக இணைப்பாளர் கே.கந்தவேல் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள விஞ்ஞானமாணி கற்கை நெறி தொடர்பாக விளக்கமளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொக்குவிலில் அமைந்துள்ள பிராந் திய நிலையத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

விஞ்ஞானமாணி - கற்கைநெறியானது தற்போது இலங்கையில் திறந்த பல்கலைக்கழகத்தினால் மாத்திரம் நடததப்படுகிறது. இது உள்வாரிக் கற்கை நெறியாக உள்ளபோதிலும் தொழில் புரிவோரின் நன்மை கருதி சனி. ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் விரிவுரைகள் இடம்பெறுகின்றன.

செய்முறைகள் யாவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆய்வு கூடங்களில் இடம் பெறுமெனவும் இறுதியில் பரீட்சைக்காக மாத்திரம் கொழும்பிலுள்ள திறந்த பல்கலைக்கழக வளாகத்திற்கு செல்லவேண்டுமெனவும் தெரிவித்தார். இதேவேளை யாழ். மாவட்டத்தில், உயர்தர வகுப்பில் விஞ்ஞானத்தை ஒரு பாடமாகக் கற்ற பல மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பல்கலைக் கழக வாய்ப்புக்கிடைக்காமையினால் தமது துறையில் பிராந்திய இணைப்பாளர் தெரிவிப்பு. பட்டம் பெறமுடியாமல் வெளிவாரியாக கலைத்துறைப் பாடங்களைப் பயின்றே பட்டச் சான்றிதழ்களைப் பெற்றுவருவது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

எனவே விஞ்ஞானத்துறையில் (உயிரியல்/ கணிதம்) பட்டம் பெற விரும்புபவர்கள் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். பிராந்திய திறநத பல்கலைக்கழகத்தில் விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் உயர்தர வகுப்பில் சித்தியடையாதவர்கள் கூட அடிப்படைக் கற்கைநெறி ஒன்றை பின்பற்றுவதன் மூலம் அவர்களும் எதிர்காலத்தில் பட்டதாரியாகும் வாய்ப்பைப் பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது. (26)



அண்மையில் நடைபெற்ற காரைநகர் கடற்படையினரால் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான 10 வீட்டுத் திட்டத்தின் மிகுதி 4 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வில், கடற்படையின் வடபிராந்திய கட்டளைத் தளபதி றியல் அட்மிரல் எஸ்.எம்.பி. வீரசேகர பயனாளி ஒருவருக்கு வீட்டுத்திறப்பையும், தளபாட உபகரணங்களையும் கையளிப்பதைக் காணலாம். (50)

## ஆதினியின் இன்றைய பலன்

(01.03.2011 – செவ்வாய்க்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி மாசி 17

இராகுகாலம் 3.28 – 4.58, சுபநேரம் 10.58 –12.28,
துவாதசி மு.இ.10.07, உத்தராடம் மு.இ.8.43,
சித்தம், வண்ணை வைத்தீஸ்வரர் கொடி.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** நினைத்த காரியச் சித்தி, பணவரவு, அதிக மகிழ்ச்சி.

**ரிஷபம்:–** அதைிப் போக்கு, வார்த்தைகள் குறைவு, ஏகாந்த நிலை.

**மிதுனம் :–** பழையகடன் வசூல், கௌரவம் உயர்வு, பகைவர் நேசம்.

**கடகம்:–** மனக் குழப்பம், சோர்வு, நிம்மதியின்மை.

**சிம்மம்:–** சினத்தால் பகை, நண்பர் விரோதம், அகாலபோசனம்.

**கன்னி :–** உற்சாகமிகுதி, வாக்குக் கொடுத்தல், தனலாபம்.

**துலாம் :–** வாகன பயம், பொருட்சேதம், அவமானப்படல்.

**விருச்சிகம்:–** தனிமை விரும்பல். எதிலும் வெறுப்பு, மனஸ்தாபம்.

**தனுசு:–** உதவிகள் புரிதல், சேமித்தல், விருந்துணவு.

**மகரம்:–** அயலவர் வெறுப்பு, குடும்பத்தில் கலகம், பணவிரயம்.

**கும்பம் :–** எதிலும் வெற்றி, நம்பிக்கையுடன் முயற்சி, ஆதாயம்.

**மீனம்:–** ஆன்மீக ஈடுபாடு, அமைதியில் விருப்பம், தாய்வழி உதவி.

## தனிப்பட்ட சாதனை-தோல்வி

(கொழும்பு)

பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் தோல்வியடைந்த இலங்கை அணி மீது, ரசிகர்கள் கோபம் அடைந்துள்ளனர்.

இதுகுறித்து அனுராதா என்ற ரசிகர் டெய்லி மிரர் இணையதளத்தில் வெளியிட்ட செய்தியில், வீரர்கள் விளம்பரத்தில் கவனம் செலுத்த தொடங்கியதால் சிறப்பாக விளையாட முடியவில்லை. தேசத்துக்காக விளையாடாமல் தனிப்பட்ட சாதனைகளுக்காக வீரர்கள் விளையாடுவதால் தான், எதிர்பார்க்காத தோல்வி கிடைத்தது என்று கூறியுள்ளார்.


இது குறித்து மீடியா அதிகாரி நிலந்தா ராஜேந்திரா கூறுகையில், பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இன்னும் சிறப்பாக செயற்பட்டு இருக்கலாம். ஒரு சில வீரர்கள் அணிக்காக ஒருங்கிணைந்து விளையாடவில்லை என்றார்.

மற்றொரு ரசிகரான சுனில் பெரேரா கூறுகையில், எமக்கு கிண்ணத்தை வெல்லும் திறமை உள்ளது. ஆனால், ரசிகர்களிடம் அதிகபட்சமாக எதிர்பார்ப்பு காணப்படுகிறது. பெரும்பாலானவர்கள், தொடர் தொடங்கும் முன்பே, நாம் கிண்ணத்தை வென்றுவிட்டதாகவே நினைக்கின்றனர். இதற்கு இன்னும் அதிக பயணம் செல்ல வேண்டும் என்றார்.




## சமனிலை முடிவு மகிழ்ச்சியளிக்கிறது

(பெங்களூர்)



இங்கிலாந்து அணி வெற்றி பெற்று இருக்க வேண்டும். ஆனால், போட்டி சமநிலையில் முடிந்தது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது என இந்திய அணித் தலைவர் டோனி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: இரு அணி வீரர்களும் சமநிலையில் முடிந்ததால் மகிழ்ச்சி அடைந்து இருப்பார்கள். ஸ்ரோஸ், பெல் மிகவும் அருமையாக விளையாடினார்கள். இதனால் 48 ஓவரில் ஆட்டம் முடிந்து விடும் என்று நினைத்தேன். ஆனால் சகீர்கான் மிகவும் அபாரமாகப் பந்து வீசி ஆட்டத்தில் திருப்பு முனையை ஏற்படுத்தினார். 338 ரன் என்பது போதுமான இலக்குதான். ஒவ்வொரு ஆட்டத்திலும் 350 முதல் 360 ஓட்டங்கள் வரை குவிப்பது என்பது மிகவும் சவாலானது.

2ஆவது துடுப்பாட்டம் செய்யும் போது ஆடுகளம் துடுப்பாட்ட வீரர்களுக்கு கூடுதல் சாதகமாக இருந்தது. ஆடுகளத்தில் பந்து திரும்பவே இல்லை. சுழற்பந்து வீரர்கள் மிகவும் கஷ்டப்பட்டனர். இரு அணி வீரர்களும் இந்தப் போட்டியில் நம்பிக்கையுடன் தான் ஆடினார்கள். எங்கள் அணியின் களத்தடுப்பைவிட இங்கிலாந்து அணியின் களத் தடுப்பு சிறப்பாக இருந்தது. எங்கள் அணியில் களத்தடுப்பு எப்போதுமே பலமாக இருந்தது இல்லை. இங்கிலாந்து அணியின் பின்கள வீரர்கள் சுவான், பிரெஸ்னன், நன்றாக ஆடி விறு விறுப்பைக் கொடுத்தனர் என்றார்.

## பதிலடிக்கு நல்ல வாய்ப்பு

(கொழும்பு)



2003இல், கென்யாவிடம் தோல்வி அடைந்து, அரையிறுதி வாய்ப்பை இழந்துள்ளோம். அந்த வேதனை எனக்கு நன்கு தெரியும். எனவே, இத்தோல்விக்கு இம்முறை பதிலடி கொடுக்க நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது என இலங்கை அணியின் துணைத் தலைவர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் தோல்வி அடைந்தது வருத்தம் அளிக்கிறது. இப்போட்டியில் எனது துடுப்பாட்டம் திருப்தி அளிக்கவில்லை. கொழும்பில் இன்று நடக்கவுள்ள கென்யாவுக்கு எதிரான போட்டியைக் குறைத்து மதிப்பிடக் கூடாது. சிறப்பாக விளையாடி பதிலடி கொடுப்போம் என்ற நம்பிக்கை உள்ளது. இருப்பினும் கென்ய அணியில் சிறந்த வீரர்கள் சிலர் இடம் பெற்றிருப்பதால், மிகுந்த கவனத்துடன் விளையாட வேண்டும் என்றார்.

## மூன்றாவது நடுவரும் மறுத்தது ஏன்?

(பெங்களூர்)

இங்கிலாந்து வீரர் இயன் பெல் 17 ஓட்டங்களில் ஆடிக் கொண்டிருந்த போது அவருக்கு, யுவராஜ்சிங் பந்து வீச்சில் இந்திய வீரர்கள் எல்.பி.டபிள்யு. கேட்டு முறையிட்டனர்.

நடுவர் பில்லி பௌடன் அவுட் கொடுக்க மறுத்ததால், நடுவரின் தீர்ப்பில் சந்தேகம் இருந்ததால் அதனை எதிர்த்து அப்பீல் செய்யும் புதிய முறைப்படி அப்பீல் செய்தனர்.

ரி.வி. ரீப்ளேயில் பந்து ஸ்டம்பை தாக்குவது தெரிந்தது. இதனால் அவருக்கு அவுட் அளிக்கப்படும் என்றே எல்லோரும் நினைத்தனர். ஆனால் இயன் பெல்லுக்கு அவுட் அளிக்க மூன்றாவது நடுவரும் மறுத்து விட்டார். இதனால் இந்த புதிய முறை சந்தேகத் தன்மையை எழுப்பியிருக்கிறது. சர்ச்சைக் குரிய இந்த முடிவுக்கு வர்ணனையாளர்கள் நசார் ஹுசைன், கங்குலி கண்டனம் தெரிவித்தனர்.

பந்து மிடில் ஸ்டம்பை தாக்குவது தெளிவாகத் தெரிகிறது. அவருக்கு அவுட் கொடுத்திருக்க வேண்டும் என்று ஹுசைன் கூறினார்.

அவரது கருத்தை ஏற்றுக் கொள்வதாக கூறிய கங்குலி, இயன் பெல் அதிர்ஷ்டவசமாக தப்பியதாக குறிப்பிட்டார். இந்தக் கண்டத்தில் இருந்து தப்பிப் பிழைத்த பெல் அதன் பிறகு 69 ரன்கள் குவித்து ஆட்டத்தின் போக்கையே மாற்றி விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விதி முறையை இந்திய கிரிக்கெட் சபையும், வீரர்களும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.


## உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2011

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஆட்டம் எல்லோராலும் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஒரு ஆட்டமாகும். 'பி' பிரிவில் மிகப் பலம் வாய்ந்த அணிகளான தென்னாபிரிக்காவும் இந்தியாவும் இனங்காணப்பட்டிருந்தன. இங்கிலாந்து அதற்கடுத்த நிலைதான். பங்களாதேஷ் அணியை வீழ்த்திய சந்தோ'த்தில் இந்தியா, நெதர்லாந்தை வென்ற ஆசுவாசத்துடன் இங்கிலாந்து அணிகள் இந்தப் போட்டியில் சந்தித்தன. இந்திய மண்ணில் நடைபெறுவதால் இந்திய தோஷம். ஒரே கொண்டாட்டம்.

இன்னொரு புறம் ஐந்தாவது விக்கெட்டை இழக்கும்போது 305 மொத்த ஓட்ட எண்ணிக்கையுடன் இருந்த இந்தியா அடுத்த ஐந்து விக்கெட்டுக்களை 33 ஓட்டங்களுக்கு இழந்ததை ஒருவரும் கண்டு கொள்ளவில்லை. காரணம் 338போதும் இங்கிலாந்தை வெல்ல என்ற நம்பிக்கை. இந்திய மத்திய பின்வரிசை வீரர்களும் இவர்களின் பந்து வீச்சென்ன பெரிய சவாலா என்பதுபோல் எடுத்ததற்கெல்லாம் ஆறடிக்க முயற்சிக்க அதுவே ஓட்ட எண்ணிக்கையைக் குறைக்கக் காரணமாயிற்று.

ஆனால், இங்கிலாந்து அணி துடுப்பெடுத்தாடிய போது படிப்படியாக ஆட்டம் தங்கள் கையைவிட்டுப் போவதை இந்திய அணியினர் உணர்ந்திருப்பார்கள். அன்ட்ரு ஸ்ரோஸ் என்ற தனி மனிதன் இங்கிலாந்தின் கௌரவத்தின் முழுப் பொறுப்பையும் தான் ஏற்றுக் கொண்டது போல், ஒரு மூழ்கப்போகும் கப்பலின் தைரியமிக்க CAPTAIN போல் ஆச்சரியப்படும் வகையில் செயற்பட ஆரம்பித்தார்.

# கனவுகள் கற்பனைகள்



அணிக்கு அமோக ஆதரவு. எதிர்வு கூறலும் இந்திய அணிக்குச் சாதகமாகத்தான் இருந்தது. இந்தக் குறிப்பை வாசிக்கும்போது எல்லாம் இறந்த காலமாகி இருக்கும். TIE என்ற ஒன்று தான் நிதர்சனமாகி இருக்கிறது. இதனை யாருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ஏதோ ஒரு அணி வெல்வது சாதாரணம். சம நிலை என்பது மிக அரிது. ஆகவே, 2011 உலகக் கிண்ணப் போட்டிகளில் முதல் சம நிலை ஆட்டம் இது.

இந்திய ரசிகர்கள் இந்தியாவின் வெற்றியை உறுதிப் படுத்தியிருந்தால் அது ஒன்றும் தவறில்லை. ஏனெனில், இந்தியா குவித்த ஓட்டங்கள் 338. இங்கிலாந்து இத்தனை தூரம் துரத்திப் பிடிக்கும் என்று எதிர்பார்ப்பது நியாயமும் இல்லையல்லவா.

அதுவும் நட்சத்திர ஆட்டக்காரர் சச்சின் தனது 47ஆவது ஒரு நாள் சதத்தைப் பூர்த்தி செய்த சந்தோஷம். அதோடு ஆட்டநாயகன் விருது. இந்த நிலையில் அவரை விட்டால் யாருக்கு? எனவே ஒரே சந்

ஒரு கட்டத்துக்கு அப்பால் எதிரணியினரின் முகத்தில் ஈயாடவில்லை.

இருந்தும் அவர்களும் நம்பிக்கையைக் கைவிடவில்லை. தோல்வி நிச்சயம் என்ற நிலையை மாற்றி வெற்றி நமதே என்ற திசையில் இங்கிலாந்து செல்ல, வெற்றி நமதே என்று இறுமாந்த இந்தியா தப்பினால் போதும் என்ற நிலைக்குப் போய்விட்டது.

இறுதியில் நடைபெற்று முடிந்தது கிரிக்கெட் ஆட்டத்தின் ஒரு அற்புதமான பதிவு. ஒரு புறம் பாகிஸ்தான் அணியின் வரை படம் ஏறுமுகமாகச் செல்ல, இன்னொரு புறம் இங்கிலாந்து அணியின் வரைபடமும் ஏறுமுகமாகச் செல்கின்றது.

ஜாம்ப வான்களே கவனம். கற்பனை கள் கலைந்துவிடும். இங்கிலாந்து அணித் தலைவர் அன்ட்ரூ ஸ்ரோசுக்கு வாழ்த்துக்கள்.

**ஜோசப் கிருஷ்ணா**

**தினமொரு தகவல்**

ICC Cricket World Cup 2011


**10 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி - 2011**

**பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு கிரிக்கெட் ஆர்வலர்களிடையே தினமொரு போட்டியை நடாத்தி தினமொரு பரிசில்களை வழங்க தினமுரசு எண்ணியுள்ளது**

38 நாட்கள் மட்டுமே நடைபெறும் உலகக்கிண்ணப் போட்டிகள் தொடர்பாக தினமுரசில் கேட்கப்படும் கேள்விகளுக்கான சரியான விடைகளை தினமும் அனுப்பி பரிசில்களை வெல்லுங்கள் .

வெற்றியாளர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

38 வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் காத்திருக்கின்றன.

எனவே விடைகளை அனுப்புங்கள் பரிசில்களை அள்ளுங்கள்

தினமுரசில் வெளியாகும் கூப்பனில் மட்டும் விடைகளை எழுதி அனுப்பவேண்டும் ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம்

**போட்டி இல: 12**

அனுப்ப வேண்டிய முகவரி:-

**தினமுரசு விளையாட்டு அரங்கு,**

ICC Cricket World Cup 2011

இல.373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

**தினமுரசு குடும்பத்தினர் பங்குபற்ற முடியாது.**

1) மார்ச் 3ஆம் திகதி நடைபெறவுள்ள தென்னாபிரிக்கா மற்றும் நெதர்லாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில் வெல்லப்போகும் அணி எது?

2) மார்ச் 3ஆம் திகதி நடைபெறவுள்ள பாகிஸ்தான் மற்றும் கனடா அணிகளுக்கிடையிலான போட்டியில் வெல்லப்போகும் அணி எது?

பெயர்: ..........

முகவரி : ..........

போ.இல : ..........

விடைகள் : 01) ..........

02) ..........

உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.

**தினமுரசு காரியாலயம்**
**373, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**


**தினமுரசு விளம்பரப் பணிமனை**
**M.P.C.S. பில்டிங்**
**127, கே.கே.எஸ்.வீதி, யாழ்.**

**விடைகளை 03 ஆம் திகதி 12.00 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.**

## றோச் 'ஹட்ரிக்' மே.தீவுகள் முதல் வெற்றி

றோசின் சிறப்பான ஹட்ரிக்கின் உதவியுடன் மேற்கிந்தியத்தீவுகள் முதல் வெற்றியைப் பதிவு செய்தது.

பத்தாவது உலகக் கிண்ணப் போட்டியின் 13 ஆவது போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள், நெதர்லாந்து அணிகள் நேற்று மோதின. பகலிரவு ஆட்டமாக புதுடில்லியில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 330 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய நெதர்லாந்து அணி 31.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. ஹட்ரிக் சாதனை புரிந்த றோச் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.



## தினமுரசு மே.தீவுகள் எதிர் நெதர்லாந்து SCORE CARD

மைதானம் : புதுடில்லி. திகதி : 28-02-2011

ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி நெதர்லாந்து : முதலில் களத்தடுப்பு.


| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) ஸ்மித் | c பர்ரேஷி b லூட்ஸ் | 53 |
| 02) கிறிஸ் கெய்ல் | c கேர்வீஸ் b ரென் டுஷாட் | 80 |
| 03) டி.எம். பிராவோ | c கேர்வீஸ் b பி.எம். சீலார் | 30 |
| 04) சர்வான் | lbw b வெஸ்ட்ஜிக் | 49 |
| 05) போலாட் | c ரென் டுஷாட் b புக்காரி | 60 |
| 06) டரன் சமி | c கேர்வீஸ் b பி.எம். சீலார் | 06 |
| 07) சந்தர்போல் | b பி.எம். சீலார் | 04 |
| 08) தோமஸ் | lbw b புக்காரி | 13 |
| 09) மில்லர் | not out | 11 |
| 10) எஸ்.ஜே. பென் | not out | 03 |
| 11) றோச் | | |
| உதிரிகள் | (b 3, lb 3, w 14, nb 1) | 21 |
| மொத்தம் | (8 w 50 ஓவர்கள்) | 330 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) கேர்வீஸ் | st தோமஸ் b எஸ்.ஜே. பென் | 14 |
| 02) பர்ரேஷி | c கெய்ல் b றோச் | 00 |
| 03) கூப்பர் | not out | 55 |
| 04) ரென் டுஷாட் | lbw b எஸ்.ஜே. பென் | 07 |
| 05) ஷிடிறென்ற் | b றோச் | 01 |
| 06) குறூத் | lbw b எஸ்.ஜே. பென் | 01 |
| 07) பி.டவிள்யூ பொறேன் | c போலாட் b சமி | 10 |
| 08) முட்டாஸர் புக்காரி | b றோச் | 24 |
| 09) பி.எம். சீலார் | lbw b றோச் | 01 |
| 10) லூட்ஸ் | lbw b றோச் | 00 |
| 11) வெஸ்ட்ஜிக் | b றோச் | 00 |
| உதிரிகள் | (nb 2) | 02 |
| மொத்தம் | (oll out: 31.3ஓவர்கள்) | 115 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| முட்டாஸர் புக்காரி | 10 | 65 | 02 |
| வெஸ்ட்ஜிக் | 07 | 56 | 01 |
| ரென் டுஷாட் | 10 | 77 | 01 |
| லூட்ஸ் | 07 | 44 | 01 |
| பி.எம். சீலார் | 10 | 45 | 03 |


| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| எஸ். ஜே. பென் | 08 | 28 | 03 |
| றொச் | 8.3 | 27 | 06 |
| மில்லர் | 07 | 23 | 00 |
| டரன் சமி | 07 | 33 | 01 |
| பொலாட் | 01 | 02 | 00 |

**215 ஓட்டங்களால் மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றி. ஆட்டநாயகன் : றோச்**



## மலிங்கவின் பங்களிப்பு அவசியம் என்கிறார் சங்கக்கார

அடுத்து வரும் போட்டிகளில் லசித் மலிங்கவின் பங்களிப்பு பெரிதும் அவசியம் என இலங்கை அணித் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: இன்றைய போட்டி எங்களுக்கு முக்கியமானதுதான். எந்த அணிகளையும் நாங்கள் குறைத்து மதிப்பிடவில்லை. அணிகளுக்கு தகுந்த மாதிரி எங்கள் திட்டங்கள் இருக்கும். வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கவின் பங்களிப்பு அடுத்து வரும் போட்டிகளுக்கு மிகவும் அவசியமானது. அவர் தனக்கான பணியை மிகச் சிறப்பாக செய்வார் என நம்புகின்றோம் என்றார்.



## இன்றைய ஆட்டம்

இலங்கை எதிர் கென்யா

மைதானம் : கொழும்பு

பகலிரவு ஆட்டம்

ICC Cricket World Cup 2011

## தினமுரசு சிம்பாப்வே எதிர் கனடா SCORE CARD

மைதானம் : நாக்பூர். திகதி : 28-02-2011

ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி சிம்பாப்வே : முதலில் துடுப்பாட்டம்.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) ரெய்லர் | lbw b குரம்சோகன் | 00 |
| 02) கோவென்றி | lbw b பெய்ட்வன் | 04 |
| 03) தைபு | c டேவிசன் b பாலாஜிராவ் | 98 |
| 04) எர்வின் | c பகாய் b பாலாஜிராவ் | 85 |
| 05) சிக்கும்பூறா | c பகாய் b றிஸ்வான் சீமா | 05 |
| 06) வில்லியம்ஸ் | c பகாய் b பாலாஜிராவ் | 30 |
| 07) லம்ப் | b பாலாஜிராவ் | 11 |
| 08) உட்சேயா | c ஹன்ஸ்ரா b குரம்சோகன் | 22 |
| 09) கிறீமர் | b பெய்ட்வன் | 26 |
| 10) பிறைஸ் | not uut | 10 |
| 11) பொபு | not uut | 03 |
| உதிரிகள் | (lb 2, w 1, nb 1) | 04 |
| மொத்தம் | (9 w 50 ஓவர்கள்) | 298 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) டேவிசன் | b பிறைஸ் | 00 |
| 02) குமார் | c&b பிறைஸ் | 01 |
| 03) குணசேகர | b லம்ப் | 24 |
| 04) பகாய் | c வில்லியம்ஸ் b பிறைஸ் | 00 |
| 05) ஹன்ஸ்ரா | st தைபு b உட்சேயா | 20 |
| 06) றிஸ்வான் சீமா | c கிறீமர் b உட்சேயா | 14 |
| 07) சுர்ஹரி | st தைபு b லம்ப் | 26 |
| 08) கோடன் | lbw b கிறீமர் | 07 |
| 09) குரம்சோகன் | lbw b கிறீமர் | 08 |
| 10) பெய்ட்வன் | not uut | 13 |
| 11) பாலாஜிராவ் | b கிறீமர் | 01 |
| உதிரிகள் | (w 9) | 09 |
| மொத்தம் | ( all out 42.1 ஓவர்கள்) | 123 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| குரம்சோகன் | 10 | 44 | 02 |
| பெய்ட்வன் | 09 | 47 | 02 |
| ஹன்ஸ்ரா | 04 | 41 | 00 |
| பாலாஜிராவ் | 10 | 57 | 04 |
| றிஸ்வான் சீமா | 09 | 51 | 01 |


| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| பொபு | 05 | 12 | 00 |
| பிறைஸ் | 08 | 16 | 03 |
| உட்சேயா | 07 | 24 | 02 |
| லம்ப் | 08 | 29 | 02 |
| கிறீமர் | 9.1 | 31 | 03 |

**175 ஓட்டங்களால் சிம்பாப்பே அணி வெற்றி. ஆட்டநாயகன் : தைபு**

## சிம்பாப்வே இலகு வெற்றி

கனடா அணிக்கெதிரான போட்டியில் சிம்பாப்வே அணி இலகு வெற்றிபெற்றது.

பத்தாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் 12ஆவது போட்டி நாக்பூர் மைதானத்தில் நடைபெற்றது. பகல் ஆட்டமாக நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய சிம்பாப்வே அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து 298 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய கனடா அணி 42.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக தைபு தெரிவானார்.




அனுசரணையாளர்:



சுந்தர்சன்

மின்சார உபகரணங்கள், நீர் வழங்கும் PVC குழாய்கள் அதன் இணைப்புக்கள், அதி நவீன அலங்கார லைற் வகைகள், சுவர் லைற்றுக்கள், மின் விசிறிகள், குளிரூட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இந்திரங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், மனங்கவர் பரிசுப் பொருட்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள தனி ஒரே இடம்

ICC Cricket World Cup 2011

SUNDHARSON

யாழ். வீதி, மானிப்பாய். T.P. 021 225 5136



(C/489)

# சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதால் ஆந்திர முதல்வர் பதவி விலகவேண்டும்

## பாரதிய ஜனதா வலியுறுத்து

(பள்ளிப்பட்டு)

ஆந்திராவைப் பிரித்து தனி மாநிலம் அமைக்கும்படி தெலுங்கானாவில் தற்போது தொடர் போராட்டம் நடந்து வருகிறது.

தெலுங்கானாப் பகுதியில் உள்ள அரசு ஊழியர்கள் தனி மாநிலம் கேட்டு தொடர் உள்ளீர்ப்புப் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

இதனால் அரசுப் பணிகள் அனைத்தும் ஸ்தம் பித்து வட்டன. ஹைதராபாத்தில் உஸ மானியா பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தை அடக்க முடியாமல் மாநில அரசு திணறி வருகிறது. இந்நிலையில் ஆந்திர பா.ஜனதா தலைவர் பண்டாரு தத்தாத்ரேயா ஹைதராபாத்தில் நிருபர்களிடம் கூறியதாவது:-

ஆந்திராவில் சட்டம்- ஒழுங்கு முற்றிலும் சீர் குலைந்து போனது. ஹைதராபாத்தில் மக்கள் எங்கும் நிம்மதியாக சென்று வரமுடியவில்லை.

தெலுங்கானா பகுதி கலவர பூமியாக மாறி உள்ளது. இதை மாநில அரசு தடுக்கத்தவறி விட்டது.


இதனால் முதல்-மந்திரி கிரண்குமார் ரெட்டி பதவி விலக வேண்டும். இல்லா விட்டால் அவரைப் பதவி நீக்கம் செய்யக் கோரி தொடர் போராட்டம் நடத்துவோம் என்றார்.

# தே.மு.தி.கவில் போட்டியிடுபவர்கள் விண்ணப்பங்களைக் கையளிக்கலாம்

(சென்னை)

தமிழக சட்டமன்ற தேர்தல் விரைவில் நடைபெற இருக்கிறது. இந்தத் தேர்தலில் தே.மு.தி.க., அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்து, தேர்தலை சந்திக்கிறது.

தொகுதிப் பங்கீடு குறித்து அ.தி.மு.க.வுடன் முதல் கட்டப் பேச்சுவார்த்தையை தே.மு.தி.க. முடித்துள்ளது. அடுத்தகட்டப் பேச்சுவார்த்தை விரைவில் நடைபெற இருக்கிறது.



இதற்கிடையே தே.மு.தி.க. சார்பில் போட்டியிட விரும்புகிறவர்கள் நாளை முதல் விருப்பப் படிவங்க்ளைப் பூர்த்தி செய்து, கட்சித் தலைமை அலுவலகத்தில் அளிக்கலாம் என்று தே.மு.தி.க. அறிவித்துள்ளது. இது குறித்து தே.மு.தி.க. நிறுவனத் தலைவர் விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட விரும்புவோர், அதற்கான விருப்பு விண்ணப்பப்படிவங்களை தே.மு.தி.க. தலைமை அலுவலகத்தில் மார்ச் 2ஆம் திகதி முதல் பெறலாம். அந்த மனுக்களைப் பூர்த்தி செய்து, அன்று முதல் 6 ஆம் திகதி மாலை 4 மணி வரை தே.மு.தி.க. தலைமை அலுவலகத்தில் வழங்கலாம்.

தமிழ்நாட்டில் பொது தொகுதிகளுக்கான விண்ணப்பங்களுக்கு ரூ.10 ஆயிரமும், தனித் தொகுதிகளுக்கான விண்ணப்பங்களுக்கு ரூ.5 ஆயிரமும் கட்டணமாகச் செலுத்த வேண்டும். புதுச்சேரி மாநிலத்தைப் பொறுத்தவரை, பொதுத் தொகுதிக்கு ரூ.5 ஆயிரமும், தனித் தொகுதிக்கு ரூ.2,500 ம் கட்டணமாகச் செலுத்த வேண்டும். சடடமன்ற தொகுதிகளுக்குப் போட்டியிட விரும்புகிறவர்கள் மேற்கூறிய வகையில் மனுக்களைப் பூர்த்திசெய்து தலைமைக் கழகத்தில் ஒப்படைக்க வேண்டும் என விஜயகாந்த் கூறியுள்ளார்.

# ஒஸ்கார் விருதை இழந்தார் ரகுமான்

(லொஸ் ஏஞ்சல்ஸ்)



இசையமைப்பாளர் ஏ.ஆர்ரஹ்மானுக்கு சிறந்த ஒரிஜினல் இசை மற்றும் சிறந்த பாடலுக்காக ஒஸ்கார் விருது கிடைக்கவில்லை.

83 ஆவது ஒஸ்கார் விருது விழா லொஸ் ஏஞ்சலஸில் நேற்று நடைபெற்றது. இதில் 127 ஹவர்ஸ் படத்தின் இ்.ப் ஐ ரைஸ் பாடல் ஒஸ்கார் விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

எனினும் அந்தப் பாடல் ஒஸ்கர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்படவில்லை. சிறந்த பாடலுக்கான விருதை டாய் ஸ்டோரி 3 படத்தின் வி பிலாங்டுகதர் பாடல் தட்டிச்சென்றது.

இதன்மூலம் ரஹ்மானுக்கு மீண்டும் ஒஸ்கார் விருது கிடைக்கும் வாய்ப்பு கைநழுவிப் போனது. 2009 ஆம் ஆண்டு ஸ்லம் டாக் மில்லி யனியர் படத்திற்காக 2 ஒஸ்கார் விருதுகளை வென்றிருக்கிறார் ரஹ்மான் என்பது குறிப்பிடத்தக்கது.

# தொடரும் தொகுதிப் பங்கீட்டுச் சிக்கல்

# சோனியா - கருணாநிதி விரைவில் பேச்சு

(சென்னை)

தமிழக சட்டசபைத் தேர்தல் திகதி இன்னும் ஓரிரு நாளில் அறிவிக்கப்பட உள்ளது. ஏப்ரல் மாத இறுதி அல்லது மே மாதம் முதல் வாரத்தில் தேர்தல் நடைபெறும். தேர்தலில் தி.மு.க. கூட்டணியும், அ.தி.மு.க. கூட்டணியும் நேருக்கு நேர் பலப் பரீட்சை நடத்துவது உறுதியாகி விட்டது.

தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ், பா.ம.க., விடுதலைச் சிறுததைகள், முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் உள்ளன. அ.தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க., ம.தி.மு.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், மனிதநேய மக்கள் கட்சி, புதிய தமிழகம் உள்பட 14 கட்சிகள் இடம் பெற்றுள்ளன. அ.தி.மு.க. கூட்டணியல் சிறிய கட்சிகளுக்கு தொகுதிகள் ஒதுக்கப்பட்டு வருகிறது.

தே.மு.தி.க., ம.தி.மு.க. மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளுடனான அ.தி.மு.க. தொகுதி பங்கீடு இந்த வாரத்தில் முடிந்து விடும் என்று தெரியவந்துள்ளது. ஒவ்வொரு கட்சியும் எந்தெந்தத் தொகுதிகளில் போட்டியிட உள்ளன என்ற விவரத்தையும் விரைவில் வெளியிட அ.தி.மு.க. தீர்மானித்துள்ளது. தி.மு.க. கூட்டணியில் பா.ம.க.வுக்கு 31 தொகுதிகளும் முஸ்லிம் லீக் கட்சிக்கு 3 இடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தை கட்சிகளுக்கு தி.மு.க. எத்தனை தொகுதிகளை ஒதுக்கீடு செய்து கொடுக்கும் என்பதில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. தொகுதி பங்கீடு தொடர்பாக தி.மு.க-காங்கிரஸ் தலைவர்கள் இரண்டு தடவை சந்தித்துப்பேசி விட்ட பிறகும் இன்னும் எந்த முடிவும் ஏற்படவில்லை. கடந்த தேர்தலில் 48 இடங்களில் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சி இந்த தடவை 90 தொகுதிகள் வேண்டும் என்று விடாப்பிடியாக அடம் பிடித்து வருவதால் தி.மு.க- காங்கிரஸ் இடையே தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை நீடித்தபடி உள்ளது.

இதையடுத்து டெல்லியில் காங்கிரஸ் தலைவர் சோனியாவை டி.ஆர். பாலு சந்தித்துப பேசி தி.மு.க.வின் நிலையை விளக்க முயற்சி நடந்தது. ஆனால் அதற்கு வெற்றி கிடைக்கவில்லை. தொகுதி பங்கீடு தொடர்பாக காங்கிரசின் ஐவர் குழு தங்கள் முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று கூறி விட்டதாக தெரிகிறது. இதனால் இனி ஐவர் குழுவைத் தவிர்த்து விட்டு, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியிடமே நேரடியாகப் பேச தி.மு.க. தலைவர் கருணாநிதி முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.



# குறள் சொல்லும் கதைகள் -30

## இன்பத்துப் பால்

## புதுமையான இன்பம்

புதுமையான இன்பம்

கஜேந்திரன் வித்தியாவின் முகத்தைப் பார்த்தான். அவளது முகத்தில் நாணம் தெரிந்தது. செம்மை நிறமுடைய கன்னங்களில் பல்வேறு விதமான உணர்வுகள் பிரதிபலித்தன. "நான் போவது உமக்குப் பிடிக்குமென்றால், நான் போகிறேன். உமது தோள்கள் பதிந்து உயர்வது என்னைத் தழுவச்சொல்லி. அவற்றின் மௌன மொழிகளின் அர்த்தம் எனக்குப் புரியும்" என்று சிரித்தான் கஜேந்திரன்.

வித்தியா எதுவும் பேசவில்லை. மெதுவாக அவனது நெஞ்சில் சாய்ந்தாள். "உம்மை இரண்டு வருடங்களாகக் காதலிக்கிறேன். உமது போக்கு எனக்குத் தெரியாதா என்ன?... நீர் கோபித்து ஏசினால் நான் பல நாட்கள் வராது இருந்தமைக்காகத் தான் என்று எனக்குப் புரியும். வரவேண்டாம் என்றால் வா என்று அர்த்தம்" என்றான் கஜேந்திரன்.

வித்தியா எதுவும் பேசவில்லை. கஜேந்திரனாலும் பேசமுடியவில்லை. சில கணங்கள் மௌனமாகக் கரைந்தன. "அம்மா வந்திடுவா போங்கோ..."என்றாள் வித்தியா எனினும் அவனைப் பிரிவதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

''நான் இங்கே தங்கட்டா'' ஆவலோடு கேட்டான் கஜேந்திரன்.

"படிப்பு முடிந்து வேலை கிடைத்த பின் தங்கலாம்'' என்றாள் வித்தியா.

"அர்ச்சகாவின் குடும்பம் எப்படி" நகுலன் ஒரு கடிதம் தந்துள்ளான். அதைக் கொடுப்பீரா?'' என்று கேட்டான் கஜேந்திரன்.

"அர்ச்சகாவின் தாயார் எமக்கு நெருங்கிய இனத்தவர். பல வருடங்களுக்கு முன் அவர்கள் கொழும்புக்குச் சென்று விட்டனர். அங்கு சென்ற பின் எம்முடன் அவர்கள் தொடர்பு கொள்ளவில்லை. ஒரு மாதத்திற்கு முன்பு தான் வந்துள்ளனர். நான் அங்கு செல்வது குறைவு. அர்ச்சகாவின் அம்மா அடிக்கடி வருவா. அவர் தான் நீங்கள் வருவதைக் கண்டுவிட்டு அம்மாவுக்கு இல்லாதது பொல்லாததுகள் யாவற்றையும் சொல்லுறவர். அர்ச்சகா எப்படியானவள், அவளது குடும்பத்தின் நிலை எதுவும் எனக்குத் தெரியாது'' என்றாள் வித்தியா

"அடுத்த முறை நான் வரும்போது யாவற்றையும் விபரமாக அறிந்து வைத்திரும். இந்தக் கடிதத்தைக் கொடுத்து பதில் வாங்கித் தாரும்" என்றான் கஜேந்திரன்.

"இதனால் பிரச்சினைகள் வராதா?..."

"பிரச்சினைகள் யாவற்றையும் நீர் வென்றுவிடுவீர். அந்த நம்பிக்கையில் தான் நான் நகுலனிடம் கடிதத்தை வாங்கி வந்தேன்." என்று கூறி வித்தியாவை அணைத்தான் கஜேந்திரன்.

"அம்மா வந்திடுவா போங்கோ" என்றாள் வித்தியா.

கஜேந்திரன், நகுலனின் வீட்டுக்கு வந்த போது நகுலன் பரபரப்புடன் இருந்தான். "என்ன மாதிரி" பரபரத்தான் நகுலன்.

"கடிதத்தைக் கொடுத்து விட்டேன். அர்ச்சகாவின் வீட்டார் பல வருடங்களுக்கு முன்பே கொழும்புக்குச் சென்றதால் அவர்களைப் பற்றிய எந்த விடயமும் வித்தியாவுக்குத் தெரியாது. நாலைந்து நாட்கள் பொறுத்திரு'' என்றான் கஜேந்திரன்.

நாலைந்து நாளோ...? நாலைந்து வருடங்கள் மாதிரியெல்லே இருக்கப் போகுது" அழுவாரைப் போல சொன்னான் நகுலன்.

"பொறுத்திரு, காதலிக்கத் தொடங்கீற்றாய். இனித்தான் பல சோதனைகளுக்குள்ளாக வேண்டும்" என்று சிரித்தான் கஜேந்திரன்.

"இன்றைக்கு என்றுமில்லாதவாறு மகிழ்ச்சியாய் இருக்கிறாய். வித்தியா என்ன தந்தவள்"

கஜேந்திரன் பலமாகச் சிரித்தான். "அவள் எதுவும் தரத் தேவையில்லை. எதையும் தருவதாகச் சொன்னாலே அதைப் பெற்றதைப் போல இருக்கும். அவளை நான் எத்தனையோ தரம் சந்தித்து விட்டேன், ஒவ்வொரு முறையும் அவள் புதுமையானவளாகவே எனக்குத் தோன்றுகிறாள். அத்துடன் அவள் தரும் இன்பமும் புதியதாகவே உள்ளது. நல்ல நூல்களைக் கற்கக் கற்க அறியாதவற்றை அறிவது போல இவளைக் கூடும் போதெல்லாம் முன்பு நான் அறியாத புதுமையான இன்பம் எனக்குக் கிடைக்கிறது" என்றான் கஜேந்திரன்.

**கே.வி.குணசேகரம்**

*அறிந்தோறு அறியாமை கண்டற்றால் காமம்*
*செறிதோறும் சேயிழை மாட்டு.* (குறள் 1110)

நல்ல நூல்களைக் கற்கின்ற ஒவ்வொரு முறையும் அறியாதவற்றை அறிவது போல, அணிகலன்களை அணிந்து அழகோடு இருக்கும் இவளைக் கூடும் போதெல்லாம் புதுமையான இன்பம் ஏற்படுகிறது.

# நிறுவனங்களூடாக மேற்கொள்ளும் திட்டங்களுக்கு நிதிக்கட்டுப்பாட்டை கொண்டுவர நோர்வே முயற்சி

(கொழும்பு)

இலங்கையில் அரசாங்கம் மற்றும் உதவி நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற திட்டங்கள் தொடர்பாக நிதிக் கட்டுப்பாடுகளை கொண்டுவர நோர்வே அரசாங்கம் முயற்சி மேற்கொண்டுள்ளது.

நோர்வே அரசாங்கம் வழங்கும் நிதியுதவிகள் தவறாகக் கையாளப்படுவதைத் தடுக்கவும், உயர்ந்த அபிவிருத்திப் பெறுமானங்களை எட்டவுமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக கொழும்பிலுள்ள நோர்வே தூதரகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இலங்கையில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நோர்வேஜியன் அபிவிருத்திக் கூட்டுத்தாபன முகவரகம் ஊடாக 2.5 பில்லியன் குரோனர்களை 1997-2009 காலப் பகுதியில் நோர்வே அரசாங்கம் வழங்கியுள்ளது.

இதைவிட இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களுக்காக நோர்வே 100 மில்லியன் குரோனர்களை செலவிட்டுள்ளது.

இதுதவிர தேசிய சமாதானப்பேரவை,மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், இலங்கை ஊடகப் பேரவை ஆகியனவும் நோர்வேயின் நிதியுதவிகளைப் பெற்று வருகின்றன.

நிதிமுகாமைத்துவம் மற்றும் கணக்காய்வுகள் தொடர்பாக நோர்வே அண்மையில் மேற்கொண்ட மீளாய்வை அடுத்தே இலங்கைக்கான நிதியுதவிகளை வழங்கும் போது நிதிக் கட்டுப்பாடுகளை விதிக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று நோர்வே தூதரகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இலங்கைக்கான புதிய நோர்வேத் தூதுவர் நியமிக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அமைதி முயற்சிகள் தோல்வி கண்டது தொடர்பாக நோர்வே அரசாங்கம் நியமித்துள்ள சுதந்திர மதிப்பீட்டுக் குழுவின் இறுதி அறிக்கை மே மாதம் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த அறிக்கையின் வரைபு கடந்த ஜனவரி 30ஆம் திகதி இறுதி செய்யப்பட்டது. இது மார்ச் 7ஆம் திகதி இலங்கை அரசிடம் கையளிக்கப்படும்.

இது சுதந்திரமான மதிப்பீட்டுக்குழு. இதன் இறுதி அறிக்கை மே மாதம் தயாராகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நோராட் இணையத்தளத்தில் இந்த அறிக்கை வெளியான பின்னர் எவரும் பார்வையிட முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தச் சுதந்திர மதிப்பீட்டுக் குழுவை ரணில் விக்கிரமசிங்க சந்தித்ததாக ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தன.

இலங்கையிலிருந்து தொலைபேசி வாயிலாகவோ அல்லது நேரிணையம் வாயிலாகவோ முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அல்லது ஒஸ்லோவில் உள்ள இலங்கைத் தூதுரக அதிகாரிகள் உள்ளிட்ட இலங்கை அரச அதிகாரிகள் எவராவது சாட்சியம் அளித்துள்ளனரா என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த நோர்வே தூதரகப் பேச்சாளர், அது பற்றித் தமக்கு எதுவும் தெரியாது என்றும் மதிப்பீட்டுக் குழுவே அதைக் கவனிப்பதாகவும் கூறியுள்ளார்.

இந்த மதிப்பீட்டுக் குழு இலங்கை வருவதற்கு நுழைவு விசா வழங்கக் கோரி விண்ணப்பித்த போது அதை இலங்கை அரசாங்கம் நிராகரித்து விட்டமை குறிப்பிடத்தக்கது.

# சிங்கள மொழியைக் கற்பதற்கு சீன,ஜப்பான் மாணவர்கள் ஆர்வம்

(கொழும்பு)

சீன மற்றும் ஜப்பான் நாட்டு மாணவர்கள் சிங்கள மொழியைக் கற்றுக் கொள்வதில் அதிக ஆர்வம் காட்டி வருவதாக உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கைப் பல்கலைக் கழகங்களில் உயர்கல்வியைத் தொடர்வதற்கு இவர்கள் விரும்புவதாகவும், அதற்கான ஒழுங்குகள் விரைவில் செய்யப்படும் எனவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.


உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் கல்வியைத் தொடர்வதற்கு 100 வெளிநாட்டு மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் திட்டத்திற்கு அமைச்சரவை ஏற்கனவே அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் உச்ச பட்சமாக ஐந்து வீதமான வெளிநாட்டு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பயங்கரவாத முகாமைத்துவம், தொல்பொருளியல், உயிர்ப் பல்வகைமை, பௌத்தம் போன்ற கற்கை நெறிகளுக்கு நல்லவரவேற்புக் காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

# அரசவளங்களைப் பயன்படுத்தினால் கட்டணம் அறவிடப்படுவது அவசியம்

## தேர்தல் ஆணையாளர் அறிவுறுத்து



(கொழும்பு)

எந்தவொரு அரசியல் கட்சிக்கும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கென் அரச வளங்கள் வழங்கப்படுமாயின் அதற்கு அவசியமாகக் கட்டணம் அறவிடப்பட வேண்டுமென தேர்தல் ஆணையாளர் நாயகம் அனைத்து அரச நிறுவன அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்தால் மாத்திரமே அரச வளங்கள் வழங்கப்பட வேண்டுமென சுற்றறிக்கை ஒன்றின் மூலம் தேர்தல் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் பிரசாரத்திற்கென அரச சொத்துக்கள் கோரப்பட்டு அதனை வழங்க மறுப்புத் தெரிவித்திருந்தால் அதற்கான உரிய காரணத்தை அறிக்கையிட்டு சமர்ப்பிக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு கட்சிக்கும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக அரச வளங்கள் இலவசமாக வழங்கப்படுமாயின் அரச சொத்துக்களை தேர்தலில் பயன்படுத்தியதாகக் கணிக்கப்படுமென தேர்தல் ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார்.

# தொற்றாத நோய்களுக்கான கட்டுப்பாடு; உதவிகளை வழங்க உலகவங்கி முன்வருகை

(கொழும்பு)

இலங்கையில் தொற்றாத நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான உதவிகளை வழங்குவதற்கு உலகவங்கி முன்வந்துள்ளதாக வங்கியின் பணிப்பாளர் றிக்காடோ காய் அம்மையார் தெரிவித்தார்.

அண்மையில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுடன் இடம்பெற்ற சந்திப்பை அடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாவது கட்ட உதவித்திட்டத்தின் கீழ் தொற்றாத நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான உதவித் திட்டத்தை எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து வழங்குவதற்கு உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை தொற்றாத நோய்களான நீரிழிவு,கொலஸ்ரோல்,உயர் இரத்த அழுத்தம் போன்றவற்றை இலங்கை போதுமான அளவு கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ள போதிலும் சுகாதார நலனிற்கு இவ்வகையான நோய்கள் அச்சுறுத்தலாகவே உள்ளதென அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

உலகவங்கிப் பணிப்பாளர் றிக்காடோ அம்மையாருக்கும், சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிற்கும் இடையிலான சந்திப்பில்,தொற்றாத நோய்கள் மற்றும் தொற்று நோய்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

# நெல்மற்றும் உபஉணவுச் செய்கையை நான்கு இலட்சம் ஏக்கரில் பயிரிடத்திட்டம்

(கொழும்பு)

எதிர்காலத்தில் நான்கு இலட்சம் ஏக்கரில் நெல் மற்றும் உபஉணவுப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான திட்டங்களை விவசாய அமைச்சு தயாரித்துவருவதாக அமைச்சின் மேலதிக செயலாளர் சாந்தா எமிற்றிய கொட தெரிவித்தார்.

இந்தத் திட்டத்திற்காக அமைச்சு 750மில்லியன் ரூபாவை ஒதுக்கவுள்ளது. இந்தத் திட்டத்தின்படி வடக்கு மற்றும் கிழக்கு உபஉணவுப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 1.6மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நெல். மற்றும் உபஉணவு விதைகளை வழங்குவதற்கு உலக உணவு விவசாய ஸ்தாபனம் முன்வந்துள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.

விவசாய அமைச்சு 7இலட்சத்து 50 ஆயிரம் புசல் விதை நெல்லை வழங்கவுள்ளது. இதில் 2லட்சத்து ஆயிரம் ப்சல் நெல்லை உணவு விவசாய ஸ்தாபனம் மேற்குறிப்பிட்ட நிதியிலிருந்து வழங்கவுள்ளது. இவ்வாறு வழங்கப்படும் விதை நெல், விவசாயத் திணைக்களம் ஆகியவற்றின் உதவியுடனேயே வழங்கப்படும்.

இந்தத் திட்டத்திற்கான வழிகாட்டலை விவசாய அமைச்சு நெறிப்படுத்தும் இதன்படி வழங்கப்படவுள்ள உபஉணவுப் பயிர்ச்செய்கைக்கான விதைகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளன. குறிப்பாக கௌபி,உழுந்து, பயறு,கச்சான் ஆகிய வையே இவ்வாறு இறக்குமதி செய்யப்பட உள்ளவையாகும்.

விவசாய அமைச்சின் திட்டத்தின்படி 75 ஆயிரம் விவசாயிகள் நன்மையடையவுள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

# டெங்கு நோயால் பீடிக்கப்பட்ட 1606பேர் இனங்காணப்பட்டனர்

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் இரண்டு மாத காலப் பகுதியில் நாடளாவிய ரீதியில் 1606 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய்ப் பிரிவு தெரிவித்தது.

இதன்படி கடந்த ஜனவரி மாதத்தில் 904பேரும், இந்த மாதத்தின் கடந்த 24ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 702 பேரும் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களில் பெருமளவானோர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களெனத் தெரிவிக்கப்படுகிறது இதன்படி கொழும்பு மாவட்டத்தில் 580 பேரும்,கம்பஹா மாவட்டத்தில் 193பேரும்,புத்தளம் மாவட்டத்தில் 115 பேரும் இந்த நோய்த் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளனர்.

இதேவேளை டெங்குநோய் பரவாமல் தடுப்பதற்கான விழிப்புணர்வுச் செயற்பாட்டிற்கு அமைவாக 12ஆயிரத்து 178 பேருக்கு விளக்கமளிக்கப்பட்டதாகவும் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவு தெரிவித்துள்ளது.

# மீன்பிடி இறங்குதுறைகள் ஐ.நா உதவியுடன் புனரமைப்பு

(கொழும்பு)

மன்னார் வடக்கு மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கடற்தொழிலாளர்களின் இறங்கு துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்காக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஓர் அங்கமான உணவு மற்றும் விவசாய அமைப்பு 122 மில்லியன் ரூபாவிற்கான ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளது.

இந்த நிதி, மன்னார் மாவட்டத்திலுள்ள 11 மீன்பிடி இறங்குதுறைகளையும் முல்லைத்தீவிலுள்ள 3 இறங்கு துறைமுகங்களையும் நிர்மானிக்கப்பயன்படுத்தப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்தொழில் காரியாலய கட்டடத்தை நிர்மானிப்பதற்கும் இந்நிதி பயன்படும். கனேடிய நிதி உதவியுடன் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் மேற்கொள்ளும் இத்திட்டம் கடற்றொழில் மற்றும் நிர்வள அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும்.

# தனித்து வெல்வதை தமிழரசுக்கட்சி நிரூபித்தால்

# அரசியலிலிருந்து ஒதுங்குவதற்கு தயார்

## கிழக்குமாகாண முதலமைச்சர் சந்திரகாந்தன் சவால்



(கொழும்பு)

கிழக்குமாகாணத்தில் தமிழரசுக் கட்சி தனித்து நின்று வெற்றிபெறும் என்று ஆதாரத்துடன் நிரூபிக்குமானால் தான் முதலமைச்சர் பதவியில் இருந்து விலகுவேன் என கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார். மட்டக்களப்பில் 7.5 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய பஸ் நிலையத்தைத் திறந்துவைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர முதல்வர் சிவகீதா பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான பசில் ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன் போக்குவரத்துத்துறை அமைச்சர் குமாரவெல்கம, மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன்,சிறுவர் அபிவிருத்தி,மகளிர் விவகார பிரதியமைச்சர் எம்.எல்.எம். ஹிஸ்புல்லா, கூட்டுறவு அபிவிருத்தி பிரதியமைச்சர் பஸீர் சேகுதாவூத் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இங்கு உரையாற்றிய கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்,

கிழக்கு மாகாணம் ஒரு விசேடமான மாகாணமாகவுள்ளது. இந்த மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்திப்பணிகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தாலும் மக்கள் மத்தியில் இன்னும் உணர்ச்சிவசப்படுத்துகின்ற, கிழக்குமாகாணம் சார்ந்த போதுமான அறிவு இன்மையால் கூறுகின்ற விடயங்கள் அல்லது தடம்புரளுகின்ற அரசியல் வியூகங்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

ஏனென்றால் எமது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் இணைந்து வாழும் ஒரு மாகாணமாகவுள்ளது.

எமது மாவட்டத்தைச் சரியாக அறிந்தவர்கள், எமது மாவட்டத்தை அறிவுபூர்வமாக விளங்கிக்கொண்டவர்கள், கருத்துக்களை உணர்ச்சிவசப்பட்டுக் கூறமாட்டார்கள். ஏன் இதனைக்கூறுகின்றேன் என்றால் அண்மையில் மட்டக்களப்பைப் பிறப்பிடமாக கொண்ட கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஒரு கருத்தைக் கூறியுள்ளார். மாகாணசபையைக் கலைத்துக்காட்டட்டும நாங்கள் வென்று காட்டுவோம் என்று.

வெறுமனே இந்த மாகாணத்தில் 126,000 வாக்குகளை வைத்துகொண்டிருக்கின்ற இந்தத் தமிழரசுக்கட்சி இந்த மாகாணத்திலே தனித்து நின்று ஆட்சியமைக்குமாகவிருந்தால் அல்லது அது தொடர்பில் பேசிய பாராளுமன்ற உறுப்பினருக்கு என்னோடு வாதிடுவதற்கான அரசியல் அறிவு போதாமல் இருக்கலாம். இருந்தும் அவரது கட்சியில் இருக்கின்ற தலைவராக இருந்தாலும் சரி செயலாளராக இந்தக் கிழக்கு மாகாணத்திலே தமிழரசுக்கட்சி தனித்துவமாக நின்று வெற்றிபெறும் என்று அவர்களால் ஆதாரபூர்வமாக நிரூபிக்கமுடிந்தால் உண்மையாகவே நான் இந்த அரசியலில் இருந்து ஒதுங்குவேன்.

நிச்சயமாக அப்படிச்செய்யமுடியாது. கிழக்குமாகாணத்தின் அரசியல் சார்ந்து பார்க்கின்றவர்கள், நில அடிப்படையில் பூகோள ரீதியில் பூரண அறிவுகொண்ட எந்த அரசியல்வாதியும் தமிழரசுக்கட்சி தனியாக ஆட்சியமைக்கும் என்று சொல்லமுடியாது.

ஆகவே, இன்னும் மீண்டும் மீண்டும் எமது மக்களை உணர்ச்சிவசப்படவைக்கின்ற அரசியலைப் பேசிப்பேசி அரைத்துக்கொண்டிருக்க முடியாது. எனவே நாங்கள் அபிவிருத்தியடையவேண்டும். ஏனைய நாடுகளுடனும் ஏனைய மாகாணங்களுடனும் போட்டிபோட்டு முன்னேற வேண்டுமாகவிருந்தால் சாணக்கியமுள்ள, அரசாங்கத்துடன் சேர்ந்தியங்குகின்ற பணிகளுக்கு நாங்கள் செல்லவேண்டும்.

எனவே மிக நீண்டகாலத்திற்குப் பின்னர் மாகாணத்திலே அபிவிருத்திகளைச் செய்யவந்துள்ள தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியை நீங்கள் ஆதரிக்கவேண்டும். நாங்கள் தான் ஒரு சாணக்கியமுள்ள மத்திய அரசாங்கத்துடன் சேர்ந்தியங்குகின்ற தேவைப்பட்டால் அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக மத்திய அரசாங்கத்துடன் முரண்டுபிடிக்கின்ற அரசியலைச் செய்துகொண்டிருக்கின்றோம்.

மீண்டும் மீண்டும் எமது மக்களை சூடாக்குகின்ற அரசியலை விட்டுவிட்டு கூட்டுப்பொறுப்புள்ள சமூகத்தைக் கட்டியெழுப்புகின்ற அரசியலைச்செய்யவேண்டும்.

இன்னமும் வீணாண கருத்துக்களை முன்வைக்கக்கூடாது. இதில் ஊடகங்கள் அதி கூடிய பங்கை ஆற்றவேண்டும்.சில சூடான செய்திகளை வெளியிட்டு பத்திரிகைகளை விற்கப் பார்க்கின்றதே ஒழிய ஆழமாகப் பார்க்கப்படுகின்றக் கருத்துக்களை இங்கு யாரும் கொண்டுவருவதில்லை.ஆகவே கிழக்கு மாகாணம் தனித்துவமான மாகாணம், கிழக்கு மாகாணத்துக்கு தனித்து அரசியல், எனவே கிழக்கு மாகாணத்துடன் இணைந்து மேற்கொள்ளும் அரசி யலுக்கு ஊடகங்கள் ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

அந்தவகையில் கிழக்கு மாகாணம் நீண்ட காலத்திற்குப் பின்னர் ஒரு வரலாற்று ரீதியான அபிவிருத்தியை அடைந்துள்ளது எனவும் குறிப்பிட்டார்.

## புதிய நிர்வாகிகள் தெரிவு



(யாழ்ப்பாணம்)

யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் நேற்று முன்தினம் வித்தியாலய கலைக்கூட மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். இதில் ஈ.பி.டி.பி கட்சியைச் சேர்ந்தவரும் யாழ்.மாநகரசபை உறுப்பினருமான எஸ்.விஜயகாந்த் தலைவராகவும் பொன்.தர்மேந்திரன் செயலாளராகவும் எஸ்.என்.செல்வராசா பொருளாளராகவும் எஸ்.ஜெயபாலசிங்கம் சிரேஷ்ட உபதலைவராகவும் வித்தியாலய அதிபர் ஞானகாந்தன், எஸ்பி.பத்மநாதன் ஆகியோர் போஷகராகவும் தெரிவு செய்யப்பட்டதுடன் செயற்குழு உறுப்பினர்களாக மேலும் 13பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## காட்சிக்கு வைக்கப்பட உள்ளன வேட்பாளர் பெற்ற விருப்புவாக்குகள்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் வேட்பாளர்கள் பெற்ற விருப்புவாக்குகள் காட்சிக்கு வைக்கப்படவுள்ளதாக உதவித்தேர்தல் ஆணையாளர் பி.சுமணசிறி தெரிவித்தார்.


இவ்வாறு வேட்பாளர்கள் பெற்ற விருப்புவாக்குகளை காட்சிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க மேற்கொண்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுநாள்வரை அரசியல் கட்சிகள் பெற்ற விருப்பு வாக்குகளே காட்சிப்படுத்தப்பட்டு வந்தன. தற்போது தான் உள்ளூராட்சி சபைத்தேர்தலுக்குப் பின்னர் முதன் முறையாக, வேட்பாளர்கள் பெற்ற விருப்பு வாக்குகள் காட்சிப் படுத்தப்படவுள்ளன.

வாக்குகள் எண்ணும் நிலையங்களிலேயே வேட் பாளர்கள் பெற்ற விருப்பு வாக்குகளும் காட்சிப்படுத்தப் படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பொருளாதார சவாலை வெற்றி கொள்ள இறக்குமதிகளைக் கட்டுப்படுத்த வேண்டும்

### அமைச்சர் வீரவன்ஸ தெரிவிப்பு



(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களின் உபயோகத்தை மட்டுப்படுத்த முடியுமானால் பொருளாதார சவாலை எம்மால் வெற்றி கொள்ள முடியும் என வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார். இது தொடர்பாக அவர்மேலும் தெரிவித்ததாவது,

உலகில் ஏற்பட்டுள்ள கால மாற்றம் இயற்கை அனர்த்தங்களுக்கு அன்றாடம் பல நாடுகள் முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. நாட்டிற்கான சவாலை வெற்றிகொண்டுள்ள நாம் உலகிற்கேற்ப எமது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. இலாபத்தை மட்டும் கருத்திற்கொள்ளாது எமது தேசியத்திற்கு முக்கியமளிப்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

கடந்த கால தவறான அபிவிருத்தி இலக்குகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு சுற்றாடலைப் பாதுகாத்து அபிவிருத்தியை முன்னெடுக்கும் யுகம் உருவாகியுள்ளது. அபிவிருத்தியில் நாம் வெற்றி கொள்ள எமது உற்பத்தி யைப் பெருக்க வேண்டும். வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் உணவை உண்பது கட்டுப்படுத்தப்பட்டு எமது உற்பத்தி உணவுகளை உண்ண நாம் முயற்சிப்போமானால் எமது பொருளாதார சவாலில் வெற்றிகாண்பது சுலபம்.

வளர்ச்சியடைந்துள்ள நாடுகள் தமது வளர்ச்சிக்குப் பொருத்தமான உணவுப் பொருட்களை பாவனைக்கு எடுத்துக்கொண்டு ஏனையவற்றை நிராகரித்தன. எனினும் வர்த்தக விளம்பரங்களின் தூண்டுதலில் நாம் அகப்பட்டுவிடும் காலகட்டம் இது. இந்நிலை மாற்றம் அடைய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## எரிபொருள் நிரப்பும் நிலையங்களை நவீனமயப்படுத்துவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான சகல எரிபொருள் நிரப்பும் நிலையங்களும் நவீனமயப்படுத்தப்படும் என்று பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்தார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் மற்றும் 2009 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி மீண்டும் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்த மாக்கப்பட்ட 107 எரிபொருள் நிரப்பும் நிலையங்களையும் நவீனமயப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.



அத்துடன் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் விசேட ஏற்பாடுகளின் பிரகாரம் பிணையாளர்கள் வசம் இருக்கின்ற எரிபொருள் நிரப்பும் நிலையங்களை நவீனமயப்படுத்துவதற்கும் அதற்காக அவர்களுக்கு நிதிவசதிகள் தேவையேற்படின் அதனைப் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பணித்துள்ளார்.

# லிபியாவிலிருந்து ஒரு லட்சம் பேர் வெளியேற்றம்
## ஐ.நா. அகதிகளுக்கான அமைப்பு தகவல்



லிபியாவில் இடம்பெற்று வரும் வன்முறையால் கடந்த ஒரு வாரகாலத்திற்னுள் மட்டும் லிபியாவை விட்டு 1 லட்சம் பேர் வெளியேறியுள்ளதாக ஜெனிவாவில் உள்ள ஐ.நாவின் அகதிகளுக்கான அமைப்பின் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நாட்டை விட்டு வெளியேறுபவர்களில் பெரும்பாலானவர்கள் துனிசியா மற்றும் எகிப்தை சேர்ந்தவர்கள் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. லிவியாவில் ஒரு மனித பேரவலம் ஏற்படலாம் என்றும், சர்வதேச சமூகம் அதற்கு உதவ வேண்டும் என்றும் ஐ.நா அமைப்புக் கூறியுள்ளது.

கடந்த சில நாட்களில் மட்டும் சுமார் 40,000 பேர் லிபியாவில் இருந்து துனிசியாவுக்கு சென்றடைந்துள்ளனர். அதேபோன்று சுமார் 55,000 பேர் எகிப்துக்கு சென்றுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் எகிப்து மற்றும் துனிசியாவை சேர்ந்தவர்கள். இவர்களோடு ஆயிரக் கணக்கான ஆசிய நாட்டவர்களும் வெளியேறியுள்ளனர். லிபியா மற்றும் எகிப்துக்கு இடையிலான பகுதியில் வங்கதேசம், தாய்லாந்து, பாகிஸ்தான் மற்றும் சூடானை சேர்ந்த சுமார் 75 பேரை ஐ.நா பணியாளர்கள் மீண்டுள்ளார்கள். மீட்கப்பட்டவர்கள் எவரிடமும் கடவுச்சீட்டு இருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் மக்கள் உணவு மற்றும் மருந்து பொருட்களில் பற்றாக்குறை இருப்பதாக கூறியதாகவும், தற்போது அகதிகள் அமைப்பு அந்த பகுதிகளுக்கு வான் வழியாக பொருட்களை எடுத்து செல்வதாகவும் கூறப்பட்டுள்ளது. எனினும் மோசமடைந்துள்ள நிலையை அடுத்து கொடை நாடுகள் உதவிகளை வழங்க வேண்டும் என ஐ.நா கோரிக்கை விடுத்துள்ளது.

# அடைக்கலம் கோரும் பாகிஸ்தானிய யுவதிகள்

(கொழும்பு)

பாக்கிஸ்தானைச் சேர்ந்த யுவதிகள் இருவர், பெற்றோர்கள் தங்களைக் கொடுமைப்படுத்துவதாகக் கூறி இலங்கையில் தஞ்சமடைந்துள்ளதாக சிறுவர் மற்றும் மகளீர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

தமது பெற்றோர்கள் தம்மை கொடுமைப்படுத்துவதாக கூறியே அவர்கள் இலங்கையில் அடைக்கலம் தேடி வந்துள்ளார்கள். தங்கள் பெற்றோர்கள் தங்களுக்குச் செய்யும் கொடுமைகளைத் தாங்க முடியாமலேயே தாம் தப்பி ஓடி வந்திருப்பதாக இந்த இரண்டு யுவதிகளும் தெரிவித்துள்ளனர்.

பாக்கிஸ்தானில் இருந்து வந்த இருவரும் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் உதவியுடனேயே இலங்கைக்குத் தப்பி வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இரண்டு யுவதிகளும் தெரிவித்திருக்கும் கருத்துக்களை மறுத்துள்ள பெற்றோர்கள் உடனடியாக இரண்டு பேரையும் தங்களிடம் மீள ஒப்படைக்குமாறு சிறுவர் மற்றும் மகளீர் விவகார அதிகார சபையிடம் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

# தேர்தல் பிரச்சாரம் தீவிரம்
## வவுனியா வருகிறார் ரவூப் ஹக்கீம்



(வவுனியா)

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், நீதிமைச்சருமான ரவூப் ஹக்கீம் இவ்வாரம் வவுனியா வுக்கு வருகை தரவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவிலும், வெண்கலைச் செட்டிக் குளத்திலும் நடைபெறவிருக்கும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்கொண்டு உரையாற்றவுள்ளார். (39)

# தங்கச் சங்கிலி கொள்ளை; சந்தேக நபர் உயிரிழப்பு!
## மாடியிலிருந்து பாய்ந்தார்

(கொழும்பு)

தங்கச் சங்கிலியொன்றை அபகரித்துக்கொண்டு சென்றதாக குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஒருவர், காலி பொலிஸ் குற்றவியல் பிரிவு அலுவலகத்தில் விசாரிக்கப்பட்டபோது கட்டடத்திலிருந்து குதித்து உயிரிழந்துள்ளார்.

13 வயதான சிறுவனொருவனிடமிருந்து தங்கச் சங்கிலியை அபகரித்ததாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

காலி பஸ்நிலையத்தில் வைத்து மேலும் பலருடன் அவர் கைது செய்யப்பட்டிருந்தார். காலி பொலிஸ் நிலயைக் கட்டடத்தின் 2 ஆவது மாடியில் அமைந்துள்ள குற்றவியல் பிரிவில் வைத்து விசாரிக்கப்பட்டபோது, அவர் அங்கிருந்து குதித்ததாக தென் பிராந்தியப் பிரதி பொலிஸ் மா அதிபர் கிங்ஸ்லி ஏக்கநாயக்க தெரிவித்துள் ளார்.

60 வயதான இந்த நபர், எல்பிட்டியவை சேர்ந்தவர் எனவும் பல கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக தேடப்பட்டவர் எனவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மேலும் கூறினார்.

பொலிஸ் காவலில் இருந்தபோது சந்தேக நபர் உயிரிழந்தமை தொடர்பாக உதவி பொலிஸ அத்தியட்சகர் ஒருவர் தலைமையில் விசாரணை நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## முகாமைத்துவ உதவியாளர் பதவி 3,389 பேருக்கு விரைவில் நியமனம்

(கொழும்பு)

பொது முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் வழங்கப்படுமென பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

போட்டிப் பரீட்சை மூலம் நாட்டின் சகல மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 3 ஆயிரத்து 389 பேருக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு விட்டது. இவர்கள் அனைவருக்குமான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன் வழங்கப்பட்டு அவர்கள் அனைவரும் நியமனத்தில் அமர்த்தப்படுவரெனவும் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# சரத் பொன்சேகாவுக்கு சுடுநீர்; வழங்குமாறு நீதிமன்று உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவிற்கு தேவையான அளவு சுடுநீர் வழங்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சரத் பொன்சேகாவிற்கு எதிரான வெள்ளைக் கொடி வழக்கு விசாரணை நேற்று கொழும்பு மேல் நீதி மன்றத்தில் நடைபெற்றது. இதில் பொன்சேகாவிற்கு தேவையான சுடுநீரினை வழங்குமாறு நீதி மன்றம் உத்தரவிட்டிருந்தபோதிலும், இது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று சரத் பொன்சேகாவின் சட்டத்தரணி நீதி மன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து சரத்பொன்சேகாவிற்கு தேவையான சுடுநீரினை வழங்குமாறு மேல் நீதி மன்ற நீதிபதி தீபாலி விஜேந்திர உத்தரவிட்டுள்ளார்.இந்த உத்தரவு அமுல்படுத்துவது தொடர்பாக ஒருவார காலத்திற்குள் நீதி மன்றத்திற்கு அறிவிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## கொள்ளை இலாப வியாபாரிகளிடம்...

கவனம் செலுத்திய அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பாடுபட்டு வியர்வை சிந்தி உழைத்த கமக்காரர்கள் எவ்வகையிலும் நஷ்டமடையக் கூடாது எனத் தெரிவித்ததுடன் அரசாங்கத்தின் நெல் உத்தரவாத விலையான 28 ரூபாவிற்கு கரைச்சி ப.நோ.கூ.சங்கத்தின் அரிசி ஆலையில் அறுவடை செய்யப்பட்ட நெல்லை கையளிக்கும்படி தெரிவித்தார்.

மேலும் கரைச்சி ப.நோ.கூ.சங்கத்தின் பொதுமுகாமையாளருடன் தொலைபேசி ஊடாக தொடர்புகொண்டு பிரதேச நெற்செய்கையாளர்களின் அறுவடை நெல்லை உத்தரவாத விலைக்கு உடனடி பணம் கொடுத்து கொள்வனவு செய்யும்படியும் இதற்காக சங்கத்திற்கு தேவையான நிதியுதவி இலகுகடன் உள்ளிட்ட பல்வேறு வழிவகைகள் ஊடாக ஏற்பாடு செய்து தரப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் (அசோக்) அவர்களின் ஏற்பாட்டிலும் தலைமையிலும் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு வருகை தந்த அமைச்சரவர்களை பிரதேச மக்கள் மலர்மாலை சூட்டி மகிழ்வுடன் வரவேற்றனர். தர்மபுரம் நெத்தலியாறு பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா சரவணன் ஐயா அவர்களின் அழைப்பின் பேரில் தேவஸ்தானத்தில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளில் பங்குகொண்ட அமைச்சரவர்கள் ஆலய பிரதமகுரு லிங்கேஸ்வர சர்மாவினால் நிகழ்த்தப்பட்ட விசேடபூஜை வழிபாடுகளில் பங்குகொண்டதுடன் ஆசிகளையும் பெற்றுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தர்மபுரம் நுண்கலை நெசவாலை மண்டபத்தில் இடம்பெற்ற பொதுமக்களுடனான சந்திப்பு ஆரம்பமானது. ஏறக்குறைய சிறிய எண்ணிக்கையிலான அரச ஊழியர்கள் மற்றும் ஏனைய துறைகளைச் சார்ந்தோரை தவிர ஏறக்குறைய முற்றுமுழுதாக கமக்காரர்களை கொண்டுள்ள இப்பிரதேசத்தைச் சேர்ந்த அமைப்புக்களின் பிரதிநிதிகள் தமது கோரிக்கைகள் தேவைகள் பிரச்சினைகள் என்பவற்றை தனித்தனியாகவும் தெளிவாகவும் எடுத்துக்கூறினார்கள். இதில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அனைத்து கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள் தமது விவசாய நெற்செய்கை மற்றும் அது தொடர்பான நீர்ப்பாசன வசதிகள் அறுவடை இயந்திரங்களின் தேவைகள் மற்றும் சந்தைப்படுத்தல் என்பன குறித்த கோரிக்கைகளை தெரியப்படுத்தினார்கள். மேலும் குடியிருப்பு காணி விவசாய காணி உரிமம் தொடர்பான பிரச்சினைகளும் முன்வைக்கப்பட்டன.

இவற்றிற்கு மேலாக பிரதேச கல்வி சுகாதார மின்சாரம் போக்குவரத்து மற்றும் ஏனைய துறைகள் தொடர்பான கோரிக்கைகளும் சம்பந்தப்பட்டவர்களினால் தெரியப்படுத்தப்பட்டதுடன் மகஜர்களும் கையளிக்கப்பட்டன.

அரச உயரதிகாரிகள் உட்பட அனைத்து திணைக்கள தலைவர்களும் அங்கு சமூகமளித்திருந்த நிலையில் பெரும்பாலான கோரிக்கைகளுக்கு உடனடித் தீர்வினைப் பெற்றுக் கொடுத்த அமைச்சரவர்கள் ஏனைய தேவைகள் விரைவில் தீர்த்துவைக்கப்படும் எனத் தெரிவித்ததுடன் தாம் மீண்டும் அடிக்கடி இப்பிரதேசத்திற்கு வருகை தந்து அம்மக்களின் மேம்பாட்டில் பங்கெடுப்பதாகவும் உறுதியளித்தார்.

பொது அமைப்புக்களின் சந்திப்பின் நிறைவாக பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க தர்மபுரம் இளந்தளிர் விளையாட்டுக் கழகத்திற்கும் தர்மபுரம் மகா வித்தியாலயத்திற்கும் ஒருதொகை விளையாட்டு உபகரணங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கையளித்தார்.


இன்றைய பொது அமைப்புக்களுடனான அமைச்சரின் சந்திப்பின்போது கிளிநொச்சி அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் கரைச்சி பிரதேச செயலாளர் சத்தியசீலன் கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் அருள்சோதி கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் கருணானந்தராஜா 571வது படையணி கட்டளை அதிகாரி கேணல் சிறிசாந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சப்ரமாது கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் இராதாகிருஷ்ணன் கிளிநொச்சி ஈ.பி.டி.பி. அமைப்பாளர் தவநாதன் உள்ளிட்ட அரசாங்க திணைக்கள மற்றும் சபைகளின் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

பளை நகரப்பகுதிக்கு இன்றையதினம் வருகை தந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நகர வர்த்தகர்கள் வியாபாரிகள் ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடி அவர்களது பிரச்சினைகளையும் தேவைகளையும் கேட்டறிந்தார்.

கடந்தகால ஆயுத வன்செயலினால் முற்றுமுழுதாக இடம்பெயர்ந்து தற்சமயம் படிப்படியாக மீளக்குடியேறிவரும் பச்சிலைப்பள்ளி பிரதேச மக்களின் பிரதானமான நகராக பளை விளங்கும் நிலையில் அந்நகரின் மேம்பாடு குறித்து நடவடிக்கை எடுக்குமுகமாகவே அமைச்சரின் மேற்படி நேரடி விஜயமும் சந்திப்புக்களும் இடம் பெற்றன. அமைச்சரின் வருகையினை அடுத்து அங்கு திரண்ட வர்த்தகர்கள் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் அமைச்சரவர்களுடன் ஆர்வத்துடன் கலந்துரையாடியதுடன் தமது மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினார்கள். அத்துடன் தமது உடனடி நீண்டகால கோரிக்கைகளையும் தெரியப்படுத்தினார்கள்.

புனரமைப்பு நிவாரணம் மீள்கட்டமைப்பு மின்சார வசதி உள்ளிட்ட அவர்களின் கோரிக்கைகள் குறித்து அதிக கவனம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் முன்னைய காலம் போலல்லாது தற்சமயம் சமாதானம் மலர்ந்துள்ள நிலையில் தாம் அடிக்கடி அப்பகுதிக்கு விஜயம் செய்யவிருப்பதாக தெரிவித்ததுடன் விரைவிலேயே அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாகவும் உறுதியளித்தார்.

இவ்விஜயத்தின் போது பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கத்தினால் நிர்வகிக்கப்படும் பளை எரிபொருள்நிரப்பு நிலையத்திற்கும் சென்று அதன் செயற்பாடுகளையும் தேவைகளையும் ஆராய்ந்ததுடன் பளை பொலிஸ் நிலைய தலைமையதிகாரி ஐ.பி. பீரிஸின் அழைப்பின் பேரில் பொலிஸ் நிலையத்திற்கும் சென்று தற்சமயம் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அரச சிவில் நிர்வாக நடவடிக்கைகள் குறித்த விபரங்களையும் கண்டறிந்தார்.அமைச்சரின் மேற்படி விஜயத்தின் போது ஈபிடிபி பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் (அசோக்) ஈ.பி.டி.பி.யின் சர்வதேச பிராந்தியங்களின் முக்கியஸ்தர் விந்தன் ஆகியோரும் உடனிருந்தனர்.



நூலகப் படிப்பகம்
நகர சபை, யாழ்ப்பாணம்.





# தேர்தலில் கூட்டணி வேண்டவே வேண்டாம்

## ஐ.தே.கட்சியின் புதிய முடிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி இனி வரும் காலங்களில் நடக்கவிருக்கும் தேர்தல்களில் யாருடனும் கூட்டணி அமைத்துப் போட்டியிடாது என்று அதன் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நேற்று நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் யுத்தம் இல்லாத நிலையிலும் அரசாங்கம் வெகுவாக விலைவாசியை அதிகரித்து வருகின்றது. அதன் காரணமாக பொதுமக்கள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

அரசாங்கத்தின் மக்கள் விரோத நடவடிக்கைகள் காரணமாக நாளுக்கு நாள் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் சாய்ந்து வருகின்றனர். அதனால் எமது கட்சிக்கான மக்கள் செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.

அதன் காரணமாக இனி வரும் தேர்தல்களில் யாருடனும் கூட்டணி அமைத்துப் போட்டியிட மாட்டோம். தனித்தே தேர்தல்களைச் சந்திப்போம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# கோப்பாயில் வீதி விபத்து இளைஞர் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கல்வியியற் கல்லூரிக்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் 4.00 மணியளவில் இடம்பெற்ற விபத்தொன்றில் இருவர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வேகமாக வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றோடு ஒன்று மோதியதாலேயே இவ் விபத்து ஏற்பட்டதாக அறியப்படுகின்றது. இவ்விடத்தில் முகுந்தன், றொபின்சன் ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

இவர்கள் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மி)

# எயர் சீவ் மார்சல் றொசான் குணதிலகவுக்கு இரு வருடங்கள் பதவி நீடிப்பு

(கொழும்பு)

கூட்டுப்படைத் தலைமையகத்தில் படைத்துறை அதிகாரிகளின் பிரதானியாகத் கடமையாற்றும் எயர் சீவ் மார்சல் றொசான் குணதிலகவுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் இரு வருடங்கள் பதவி நீடிப்புச் செய்துள்ளார்.

விமானப்படைத் தளபதியாக பணியாற்றிய எயர் சீவ் மார்சல் றொசான் குணதிலக நேற்று முன்தினம் தனது பதவியில் இருந்து ஓய்வு பெற்றிருந்தார்.

இந்நிலையில், விமானப் படையின் 13 ஆவது தளபதியாக எயர் வைஸ் மார்சல் ஹர்சா அபேவிக்கிரம நேற்று பதவியேற்றுள்ளார்.

இதனிடையே, ஓய்வு பெற்றுள்ள எயர் சீவ் மார்சல் றொசான குணதிலக கூட்டுப்படைத் தலைமையகத்தில் படைத்துறை அதிகாரிகளின் பிரதானியாகத் தொடர்ந்து பணியாற்றுவார் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எயர் சீவ் மார்சல் றொசான் குணதிலக 12 ஆவது விமானப் படைத் தளபதியாக கடந்த 5 வருடங்கள் பணியாற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வெள்ளப் பாதிப்புக்களுக்கு...

கூடாரங்கள் அமைக்க 22 மில்லியன் ரூபாவும் வழங்கப்படவுள்ளதாக கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவராலயம் வெளியிட்ட ஊடக அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் இலங்கையில் ஏற்பட்ட வெள்ள. அனர்த்தத்தினால் பாதிக் கப்பட்டவர்களுக்கு ஜப்பானிய அரசு ஏற்கனவே 220 மில்லியன் ரூபா நிதி வழங்கியுள்ளதுடன், கூடாரங்கள் மற்றும் படுக்கை விரிப்புக்கள் வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கான....

உதவிகளை வழங்கியுள்ளன. இவற்றைவிட, இலங்கை அரசுக்கு நேரடியாகவும், நோர்வே அரசு நிதி உதவிகளை வழங்கியுள்ளதுடன், யுத்தத்திற்குப் பிந்திய இலங்கையைக் கட்டியெழுப்பும் நோக்குடன் மேலும் பல உதவிச் செயற்திட்டங்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்தநிலையில், எதிர்காலத்தில் அபிவிருத்தித் திட்டங்களுக்காக இலங்கை அரசாங்கத்திற்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கும் வழங்கப்படும் நிதி உதவிகள் குறித்து எதிர்வரும் காலங்களில் கண்காணிக்கப்படும் என நோர்வே அரசு அறிவித்துள்ளது.

அபிவிருத்தித் திட்ட நிதிக் கொடுப்பனவுகள் உரிய முறையில் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நோர்வே தூதரக உயரதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

1997ம் ஆண்டு முதல் 2009ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் நோர்வே அரசாங்கம் சுமார் 2.5 பில்லியன் நொக் பெறுமதியான உதவிகளை இலங்கைக்கு வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதான முனைப்புக்களுக்காக 100 மில்லியன் நொக் செலவிடப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார் தேசிய சமாதானப் பேரவை, புலிகளின் சமாதானச் செயலகம், அரசாங்கத்தின் சமாதான செயலகம், மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் மற்றும் இலங்கை ஊடகப் பேரவை போன்ற அமைப்புக்களுக்கு நோர்வே அரசாங்கம் உதவிகளை வழங்கியுள்ளது. நிதி மோசடி மற்றும் ஊழல்களை தடுப்பதற்காக அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து எதிர்வரும் காலங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## வடக்கு மாகாண...

நுட்பவியல் சேவையின் விவசாய போதனாசிரியர் வகுப்பு III பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

பொது அறிவு, பொது உளச்சார்பு பரீட்சையின் மூலமே விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

தகுதியான விண்ணப்பதாரிகள் பரீட்சைக் கட்டணமாக ரூபா 250ஐ புத்தூர் தபாலகத்தில் மாற்றக்கூடிய வகையில் "செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம் என்ற பெயருக்கு காசுக்கட்டளையைப் பெற்று தமது விண்ணப்பத்துடன் எதிர்வரும் 30.03.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பம் கோரல் தொடர்பான மேலதிக விபரங்களை தினமுரசு அலுவலகத்தில் பார்வையிடலாம்.

## கொழும்பில்...

போராட்டம் நடாத்தி சர்வதிகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க மக்கள் தயாராக வருவார்களானால், அதற்கு தலைமை தாங்க ஜே.வி.பி தயாராக இருக்கின்றது.

அதிகரித்து வரும் பொருட்களின் விலைகளை உடனடியாகக் குறைக்குமாறு பல தடவைகள் நாங்கள் வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

அதனை மேலும் வலியுறுத்தும் வகையில் ஆர்ப்பட்டமொன்றை நடாத்தவுள்ளோம். இந்த ஆர்ப்பாட்டப் பேரணி பொரளை கெம்பல் பூங்காவிலிருந்து ஆரம்பித்து பாதயாத்திரையாக லிப்ரன் சுற்று வட்டம் வரை செல்லவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## லிபியாவிலிருந்து....

36 பேர் படகு மூலம் கிறீஸ் நாட்டுக்குத் தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் 16 பேர் மர்மமான முறையில் காணாமல் போய் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன இவ்வாறு காணாமல் போன 16 பேர் பற்றிய தகவல்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

# முன்னாள் புலி உறுப்பினர்கள் 150 பேர் நாளை விடுதலை

(வவுனியா)

வவுனியா நலன்புரி முகாமில் தொழில்பயிற்சி பெற்ற முன்னாள் புலி உறுப்பினர்களில் 150 இளைஞர்களும், யுவதிகளும் நாளை விடுவிக்கப்படவுள்ளனர்.

வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (39)

# தெற்கு நோக்கிச் செல்கிறது வடபகுதியின் கடலுணவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதிக்கான கடலுணவு ஏற்றுமதி தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது.

தென்பகுதியிலிருந்து தினமும் யாழ். வரும் கூலர் வாகனங்கள் மூலம் இந்தக் கடலுணவுகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

குருநகர், கொட்டடி மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் உள்ள மீன் விற்பனை சந்தைகளில் இந்தக் கடலுணவுகள் கொள்வனவு செய்யப்பட்டு எடுத்துச் செல்லப்படுகின்றன.

இந்த கடலுணவு ஏற்றுமதியால் குடாநாட்டில் அவற்றின் விலைகள் திடீரென அதிகரித்துக் காணப்படுகின்றன. (25)

# வடக்கின் அபிவிருத்திக்கு கனேடிய அரசு உதவும்

(கொழும்பு)

வடக்கின் அபிவிருத்திக்கும் மற்றும் மீள்குடியேற்றத்திற்கும் கனேடிய அரசு உதவிகளை வழங்கவுள்ளதாக கனேடியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வவுனியாவிற்கு விஜயம் மேற்கொண்ட கனேடியத்தூதுவர் வவுனியா அரசாங்க அதிபர் பணிமனையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் தற்போது யுத்தம் ஓய்ந்து அமைதி நிலவி வரும் வேளையில் அரசினால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதிலும் குறிப்பாக [illegible]னால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடபகுதியில் அபிவிருத்திப் பணிகள் தற்போது அதிகளவில் முன்னெடுக்கப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

வடமாணத்தின் அபிவிருத்திக்கும் தற்போது நிவாரணக் கிராமங்களில் தங்கியிருக்கின்ற மக்களின் மீள்குடியேற்றத்திற்கும் கனேடிய அரசு உதவிகளை வழங்குமென அவர் தெரிவித்தார்.

# கைதடி விபத்தில் சிறுவன் மரணம்; இளைஞன் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கைதடிப் பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் 17 வயதுச் சிறுவன் ஒருவர் உயிர் இழந்து உள்ளார். இளைஞன் ஒருவர் படுகாயம் அடைந்து உள்ளார்.

கைதடி இருபாலை வீதியில் ஹன்டர் வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதுண்டதால் இந்த விபத்து நேர்ந்துள்ளது அதில் மோட்டார் சைக்கிளின் பின் ஆசானத்தில் அமர்ந்திருந்த 17 வயதுச் சிறுவன் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மரணமடைந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கச்சதீவு அந்தோனியார்.....

நடைபெறுகின்றமை தெரிந்ததே.

இவ்வாறான நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் முகமாகவே சுங்கத்திணைக்கள த்தினது நடவடிக்கை விஸ்தரிக் கப்படவுள்ளது.

மேலும், யாழ்.குடாநாட்டு மக்கள் குருநகர் ஊடாகவும், நெடுந்தீவு ஊடாகவும் கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழா நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் முகமாக அனுமதிக்கப்படவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பங்குத்தந்தை அமலராஜ் அடிகளாரும், தொண்டர்களும் ஆலயத்தை துப்புரவாக்கும் பணிகளுக்காக எதிர்வரும் 14ஆம் திகதி இங்கிருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளனர்.

ஆலய உற்சவத்தில் கலந்து கொள்பவர்களுக்குப் பாதுகாப்பு, குடிநீர் ஏற்பாடுகளை கடற்படையினர் செய்துகொடுக்கவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (பா,04)

## வடக்கு மாகாணத்...

கூட்டத்தில் சகல திணைக்களங்களினதும் தற்போதைய நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதுடன், முக்கியமான திணைக் களங்களின் விடயங்கள் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டதுடன், தேவையான ஆலோச னைகளையும் ஆளுநர் வழங்கினார்.

அத்துடன், குறித்த திணைக் களங்கள், கடந்த வருடத்தில் திட்டமிடப்பட்ட திட்டங்களை நிறைவேற்றியதைப் பாராட்டிய ஆளுநர், இந்த வருடத்திலும் திட்டங்கள் நிறைவு செய்து வடபகுதி மக்கள் பயனடைய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மார்ச் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.